# தமிழ்ச் சிட்டு

குரல் : 8.
இசை: 8-10.

விலை :
75 காசு.

## அவனே இவன்!

அன்புத் தமிழன் ; அருட்செல்வன் ;
தான் வளர்ந்த
இன்பத் தமிழ்க்கே எனையீந்தேன்
என்பான்காண் !
இன்பத் தமிழ்க்கே எனையீந்தேன்
என்பானே
தென்புத் தமிழ்காக்கும் தென்மொழியைத்
தீய்த்தனனே !

மானத் தமிழன் ; மறக்குலத்தோன் ;
மண்ணுளுங்
கானக் குயிலாய்த் தமிழ்ப்பாடுங்
காவலன்காண் !
கானக் குயிலாய்த் தமிழ்ப்பாடுங்
காவலனே
மானத் தமிழ்வளர்க்கும் தென்மொழியை
மாய்த்தனனே !

கொற்றத் தமிழன், கொடும்பகையைக்
கோலோச்சால்
முற்றத் துவைக்கும் முனைவுள்ள
மொய்ம்போன்காண் !
முற்றத் துவைக்கும் முனைவுள்ள
மொய்ம் போனே
செற்றுத் தமிழ்ப்புதுக்கும் தென்மொழியைச்
சீய்த்தனனே !

கூர்த்த மதியன் ; குறைவில்லாக்
கொள்வினையன் ;
கார்த்தண் முகிலாய்ச் செந்தமிழைக்
காப்போன்காண் !
கார்த்தண் முகிலாய்ச் செந்தமிழைக்
காப்போனே
போர்த்த இருள்கடியுந் தென்மொழியைப்
புய்த்தனனே !

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

# நமக்கு வந்த மடல்கள்.

**0 : 462 :** அருந்தமிழ்ப் பாவல! வணக்கம். அரசியல் கூத்தாடும் அரங்கத்தில், நாமும் தமிழைத் தன்நிலை பெறச் செய்ய செயல்கள் பல செய்தும், கண் மூடிய தமிழர் கண் திறந்திட மறுக்கின்றனர்...; நாங்கள் எங்களின் முயற்சிகளிலோ, செயல்களிலோ எள்ளத்தனையும் அயர்ந்திடவில்லை. அதற்குக் கரணியமாய் அமைந்தவை தங்களின் ஊக்க வுரைகளும், துவண்ட உள்ளங்களைத் துடித்தெழச்செய்யும் தங்களின் உணர்ச்சி யுரைகளுமேயாகும். நாளும் நாளும் தங்களை நேரில் கண்டு தங்களின் உரை கேட்டு உள்ளம் உறுதியும், தெளிவும் பெற என் உயிர் துடிக்கின்றது. ஏனெனில் உங்களுடன் (அண்மையில், கீரமங்கலத்தில் கொண்ட) ஒருநாள் தொடர்பில் நான் பெற்ற உணர்வு, உள்ள உறுதியானது எனது ஏழு ஆண்டுக் காலத் 'தென்மொழி' படிப்பிற்கு இணையானதாய் அமைந்திருந்தது. மேலும், 'தென்மொழி' எடுத்துக்கொள்ளும் வெளியீட்டுக் காலம் என் உள்ளத்தைத் துடிக்கச் செய்கின்றது. ஒவ்வொரு நாளும் வெளியாகவேண்டிய 'தென்மொழி' திங்கள் பல கழிந்தபின் வெளியாவது என் போன்ற தமிழ் இளைஞர்களுக்கு போதியதாகாது. தங்களின் அன்பு மறவா,

— சி. செந்தமிழரசு, நகரம், (அஞ்) கீரமங்கலம்.

**0 : 463 :** தமிழத்தரையின் விடுதலை வேண்டிய எங்களின் உடன் பிறப்புகளைச் சிறையிலிட்ட செய்தியினைக் கேட்டுக் குருதி கொதிப்படைகின்றது.

நமது எதிரிகள் தாங்கள் கண்ட நெடுநாளையக் கனவை நிறைவேற்றிக் கொண்டதை யறிந்து எங்கள் நெஞ்சப் குமுறுகின்றது. எங்கள் கண்கள் கலங்குகின்றன. நல்லதற்குத் தடை! நற்றமிழ்க்குத் தடை! நமது விடுதலைப் பண்ணுக்குத் தடை! நமது உயிரினும் மேலான தென்மொழிக்குத் தடை! நினைக்க இயலவில்லையே! தடை நமது விடுதலை வேட்கையைத் தடுத்துவிடாது. தடை நமக்கு மேலும் ஊக்கமளிக்கின்றது. தடை நமது ஆற்றலை வலுப்படுத்துகின்றது. இப்பொழுதுதான் நாம் தளராது செயல்படவேண்டும். பேசிப் பேசி நாம் இழந்த காலம் போதும். இனிமேல் நமக்குச் 'செயல்'தான் தேவை. நமது போராட்டத்தைச செயல் முனைக்குத் திருப்புவோம். தமிழ்த்தரையை விடுதலை செய்வோம்.

விடுதலைப் போருக்கு ஆற்றல் மிக்க நமது படைக்கலம் தென்மொழி! வேட்டெஃகத்தைவிட செயல் ஆற்றத் தக்க தென்மொழி நமக்கு இன்றில்லை. 'தமிழ்ச்சிட்டு' விரைந்து பறக்கட்டும். ஆனால் எதிரியின் கையில் நமது படைக்கலத்தை இழந்துவிடாது எச்சரிக்கையாகச் செயல்படுவோம்.

—[அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க.]

# சிறை என் செய்யும்?

'தென்மொழி' இதழைத் தமிழக அரசு
தன்பழி காத்திடத் தடைசெய் துவந்தது!

'தென்மொழி' இதழால் தீந்தமிழ் மக்கட்கு
என்பிழை நேர்ந்ததோ, யாமதை அறியோம்!

'அருட்செல்வர் ஆட்சியை அரணிட்டுக் காக்க'—
என்று எழுதினேம், இதுதான் பிழையோ?

இன்று பிறந்த இனமெலாம் உரிமையால்
நன்று சிறந்து நனிவாழ் கையிலே,
என்றோ பிறந்த ஏமாளித் தமிழினம்
தின்பதே தொழிலாய்த் தெருத்தெரு வாக,
ஊர்ஊ ராக, நாடுநா டாக
ஆர்க்கும்வல் லடிமையாய் அலைந்து திரிவதைப்
பதினா றாண்டாய்ப் பதைக்கும் நெஞ்சோடு
அதிர முழக்கினேம் அதுதான் பிழையோ?

'குமுதம்' போலும் குப்பை இதழ்கள்
தமிழைக் கெடுத்துத் தாழ்ந்தாழ்த் துகையிலே
தூய்தமிழ் நடையால் தொல்தமிழ் எழுதித்
தாய்மொழி காத்தோம்!—தவறிது தானோ?

திரவிடர் உரிமைகள் தெருவெலாம் முழக்கியோர்
கரவடர் போல்தமைக் காத்துக் கொள்ளவே,
அஞ்சியும் கெஞ்சியும் அயலவர் ஆட்சிக்குக்
கஞ்சி போடுகி றார்—எனக் கதறினேம்!
இதுதான் பிழையோ?—ஏதென அறிகிலோம்!

ஒன்று மட்டும் உண்மையென் றறிவோம்!
'இந்திரா' எய்த நெருக்கடி அம்புக்குத்
'தென்மொழி' கேடய மாகத் திகழ்ந்து
கலைஞர் மார்பைக் காத்து நின்றது
நிலையெனில், நமக்கது விலையிலாப் பெருமை!

'கலைஞரைக் காக்க'—வென் றெழுதிய கையைக்
கலைஞரும் காத்தார் என்பதா பெருமை?

காத்தவர் கைகளால் கழுத்து முறிபடும்
மாத்தவம் செய்தது 'தென்மொழி' மாதிகை!

பதினா றாண்டுமுன் பிறந்தது; வளர்ந்தது;
அதிர்நடை யிட்டே அரிமாப் போல
உரிமை முழக்கி உலாவந் திருந்தது!
நரிமை யாரிடை நம்மினம் காத்தது!
கனித்தமிழ் காக்கும் கலைஞரால் தன்பெருந்
தனித்தமிழ்த் தொண்டைத் தடுத்துக் கொண்டது!
அதுவரை 'தமிழ்ச்சிட்டு' அதன்பணி செய்யும்!

எதுவரை எம்மூச் சியங்கு கின்றதோ—
எதுவரை எம்முடல் இம்மண் தோயுமோ—
எதுவரை எம்மனம் நினைவலை எழுப்புமோ—
அதுவரை மொழி, இன ஆர்ப்படங் காது!

நறைபிழி தீந்தமிழ் நலங்கரு துகையிலே
சிறையின் கதவுகள் என்செயும் எம்மை?

அடிமைத் தமிழரின் விடிவெண் ணுகையிலே
மிடிமைச் சிறைக்கத வென்செயும் எம்மை?

ஒண்புகழ்த் தமிழ்நிலம் உரிமை மீட்கையில்
திண்சிறைக் கம்பிகள் என்செயும் எம்மை?

விடியாத் தமிழ்நலம் வித்திடும் எமக்குப்
படியாத் துன்பம் படரினும் படர்க!
துடியா நிற்குப் எம் நாவும் உயிரும்
வடியா உணர்வும் வன்மை எய்துக!

அடிமை மீட்கும் அரும்பணி செய்கையில்
குடிமை பெயர்ந்ததெம் உயிரெனில், கொண்டிடும்
உடலுக் கதுதான் உவகை;
அடலுக் கதுதான் அரும்பெறல் வாழ்வே!

---

# தென்மொழிப் பணியைத் தமிழ்ச்சிட்டு செய்யும்!

தமிழக அரசால் தடைப்படுத்தப் பெற்ற 'தென்மொழி' இனி மீட்கப் பெறும் வரை, 'தமிழ்ச்சிட்டு' அப்பணியைத் தாங்கிச் செய்யும். எனவே, அன்பர்கள் இனித் தமிழ்ச்சிட்டையே தென்மொழியாய்க் கருதுக; பேணுக; புரக்க!

**இனி, தமிழ்ச்சிட்டுத் தனியிதழ் விலை 75 காசு!**
**ஆண்டுக் கட்டணம் 9 உருபா!**
**அரையாண்டுக் கட்டணம் 5 உருபா!**

எனவே, இனி, ஆண்டுக் கட்டணத்தையும், மடல்களையும், ஆசிரியர், தமிழ்ச்சிட்டு, 51, அருணாசல (ஆசாரி) தெரு, சென்னை-5. என்னும் முகவரியிட்டே அனுப்புக!

விரைவில் தென்மொழிக்குப் பகரமாக வேறோர் இதழ் தொடங்கப்பெறும். அதன்பின் தமிழ்ச்சிட்டு தன் இயல்பான பாதையிலேயே பறக்கும். அந்நிலை அறிவிக்கப் பெறும் வரை முகவர்களும், அன்பர்களும் முன்போலவே ஒத்துழைக்கக் கேட்டுக்கொள்ளப்பெறுகிறார்கள்.

— அமைச்சர், தமிழ்ச்சிட்டு.

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்


“ கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை ” எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!


குரல்-8.-தி.பி. ௨௦௦௬.(ஆடை-மடங்-சூலை-செப்'. 1975).-இசை-8-10.


# 3-ஆவது விடுதலை மாநாட்டுக்கு முன்னும், பின்னும்.

என் சிங்கைச் செலவால் மூன்றாவது தமிழக விடுதலை மாநாடு ஓராண்டுத் தள்ளிப் போனதேனும், கோவையில் நடைபெறுவதாக இருந்த மாநாடு தமிழகத்தின் தலைநகராகிய சென்னையிலேயே நடந்தது, அக் காலத்தாழ்த்தத்தை ஈடு செய்தது. வெறும் மாநாடுகள் போடுவதும், கூட்டங்கள் நடத்துவதுமே நம் நோக்கமன்று. ஆனால், மக்கள் மனத்துள் நம் நோக்கம்பற்றிய கருத்துகளை மலர்த்துவிப்பதற்கு அவற்றைவிட வேறு வழியில்லை. மேலும், நெடுங்கால வல்லடிமைத் துய்ப்பாலும், மடித்துயிலாலும், ஈக மனப்பாங்கின்மையாலும், நம் இனத்துக்கே உரிய உள்ளரிப்பாலும், இந்நாட்டில் மக்கள் புரட்சி அத்துணை எளிய முயற்சியன்று. ஏனோ தானோ என்று கொள்கைகளை விளங்கிக் கொண்ட உள்ளங்களும், சிறைக்கஞ்சும் போக்கும் எந்த வினைப்பாட்டுக்கும் அத்துணை எளிதில் வளைந்து கொடுப்பதில்லை. இதனாலேயே இங்குக் கொளுத்தப்பெற்ற எல்லா வகை உணர்ச்சிகளும் பயனற்றுப் போகின்ற ஒரு புன்மை நிலையை நாம் நன்கு உணர முடிகின்றது.

எனவே, வழக்கம்போல் கூட்டிய இந்த விடுதலை மாநாடும் எதிர்பார்த்த பயனை நல்கவில்லை. கடந்த ஆண்டுகளில் திருச்சியிலும்,

மதுரையிலும் நடந்த மாநாடுகளைவிட இந்த மாநாட்டில் ஒரு திருப்பம் இருந்தது. பிரிவினைக்கொள்கையைத் தன் உயிர் மூச்சாகக்கொண்ட திராவிடர் முன்னேற்றக் கழகம், அக்கொள்கையை வெளிப்படை யாகக் கைவிட்ட பின்னரும், அக்கழகத்தின் முன்னணிக் கொள்கை பரப்பாளராக விருந்த திரு. மூரசொலி அடியார் நம் இயக்கத்தின் கொள்கையால் ஈர்க்கப்பெற்றுத் தம் கழகக் கொள்கையில் நிறைவு பெருத அந்நிலையைச் சுட்டிக்காட்டி ஓர் அறிக்கை விட்டு, நம் வினைப் பாடுகளுக்குத் துணையாக வந்தார். அவரின் மாய்ந்து போகாத கொள்கைப் பற்றையும் வெளிப்படையான உள்ள உணர்வையும் மதித்துப் பாராட்டி, அவரையும் நம்முடன் இணைத்துக் கொண்டோம்.

ஆனுல், வழக்கம்போல் நம் மாநாட்டு முயற்சிகள் அனைத்தும் அரசால் முன்கூட்டியே தடைசெய்யப் பெற்றன. அதன் முதல் நட வடிக்கையாக நானும் அடியாரும், எங்களுடன் மாநாட்டுச் செயற் குழுவினர் அறுவரும் மாநாட்டுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே சிறைப் பிடிக்கப் பெற்றுக் காவலில் வைக்கப் பெற்றேம. எங்களைத் தொடர்ந்து அடுத்த இரண்டு நாட்களிலும் மேலும் பதிறுன்கு பேர் சிறைப் பிடிக்கப்பெற்று, எங்களைப் போலவே காவலில் வைக்கப் பெற்றனர்- முதலணியினரான எங்கள் எண்மருக்குப் பின் சிறை வந்தவர்கள் ஊர்வலம் போனதாகவும், குறிப்பிட்ட நாளில் குறிப் பிட்ட இடத்தில் மா நா டு நடத்தியதாகவும் சிறைப்பட்டவர்க ளாவார்கள். ஆனுலும் மொத்தம் இருபத்திரண்டு பேர்களே சிறைப் பட்டுக் காவலில் வைக்கப் பெற்றேம். இத் தொகை நம் கொள் கையை நோக்கவும், அதன் வெற்றி முறைகளை நோக்கவும் மிகமிகச் சிறிய தொகையானுலும், நாட்டின் நெருக்கடிகளையும், கடுபிடிகளை யும் நோக்க மிகவும் பெரியதும் ஓரளவு பாராட்டக் கூடியதும் ஆகும். இருப்பினும் ஓர் ஆயிரம் பேரோ, ஈராயிரம் பேரோ சிறைப்படாத எந்தக் கொள்கையும் முயற்சியும் அரசினர் கவனத்துக்கும் மதிப் புக்கும் உட்படுவதில்லை.

மேலும். அடியார் ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையில் அறிமுகப் பட்டவராக இருந்தமையாலும், அவர் நம் மாநாட்டுச் செயற்குழுவினர்க்கு அறிவிக்காமலேயே தாமே தம் பெயரை முன்வைத்தும, உதயசூரியன் இலச்சினையுடனும், கறுப்பு சிவப்பு ஆகிய இரு வண்ணத்திலும், மிகப்பெரிய அளவில் அடித்துக் கொண்ட சுவரொட்டியாலும், நம் மாநாட்டைத் தி. மு. க. சார்பில் நடந்த மாநாடாகவே ஒரு சில இதழ்கள் அறிமுகப் படுத்தியிருந்தன. இதற்கு நேர் எதிர் நடவடிக்கையாக, நீல, சிவப்பு வண்ணத்தில் என் பெயரை முன் வைத்து அடித்துச் சிறு அளவில் ஒட்டப் பெற்றிருந்த சுவரொட்டி, அவ்விதழ்களின் கருத்தை மாற்ற அத்துணையளவு பயன் படவில்லை. அடியாரின் இந்த நடவடிக்கையால் மாநாட்டு முயற்சி களில் முன்கூட்டியே தொய்வு விழுந்துவிட்டது. அவரின் அந்த நட வடிக்கையும், அடுத்தடுத்துச் சிறைக்கு வெளியிலும், சிறைக்குள்ளும் அவர் நடந்துகொண்ட நடவடிக்கைகளும், ஏற்கனவே திட்டமிட்டுச் செய்யப் பெற்றனபோல் எனக்குப்பட்டன. மேலும், அக்கட்சித் தொடர்பற்ற நம்பகமான நடுநிலையாளர் சிலரிடமிருந்தும், அவர் நம்

இயக்கத்தைப் பிளவுபடுத்த வேண்டியே விடுக்கப்பெற்றவராக நமக்குக்கிடைத்த செய்தியை உறுதிப் படுத்துவதுபோல் அவர் நடவடிக்கைகள் இருந்தன.

சிறைக்குப் போகுமுன்பே கிடைத்த தொடக்கச் செய்திகளை, நான் பொருட்படுத்தாமற் போனதற்கு அவர் என்பால் வைத்த பேரன்பும், பெருமதிப்புமே கரணியங்களாக விருந்தன. அவற்றை யடியொட்டி அவர் தம் நீட்டோலை நாளிதழில், நெஞ்சந் திறந்து, நெஞ்சோடு பேசியதாக வெளியிட்ட கருத்துரையை நான் பெரிதும் மதித்தேன்; நம்பினேன். ஒருவேளை அவ்வுரை உண்மையாகவே இருந்திருந்தாலும், அவர் நம்கொள்கையையும், நம் விடுதலை மறவர்களின் உள்ளங்களையும், பதமும் ஆழமும் பார்ப்பதுபோல், அவர் சிறைக்குள் நடந்துகொண்ட முறைகளும், கொள்கைக் கட்டுப்பாடுகளுக்கு மாறுகச் செயல்பட்ட தன்மைகளும், அவரின் தாய்க்கட்சியின் மேல் அவர் கொண்ட பற்றையும், பாசத்தையுமே காட்டின. அத்தகைய அவர் உணர்வில்கூட நான் களங்கம் கற்பிக்க விரும்பவில்லை. ஆனல், அவர் சிறைக்குள் வெளிப்படையாகத் தம் கட்சிக் கொள்கைகளையும், இளமையுள்ளங்களுக்கு இனிப்பான சில செய்திகளையும் பேசி, நம்முடன் சிறைப்பட்டிருந்த சில இளந்தை நெஞ்சங்களைத் திசை திருப்பியதுதான் எனக்குப் பெரிய அதிர்ச்சியையும், வருத்தத்தையும் தந்தன.

அரசியல் கட்சி ஈடுபாடுடைய ஒருவர் எப்படி இயங்குவார் என்பதை நான் நன்கு உணர்வேன். அதிலும் தி. மு. க. உணர்வுடைய பலரை உள்முகமாகவும், வெளிமுகமாகவும் நான் நன்ருக அறிவேன். இருப்பினும் தி. மு. க.–வின் மேல் எனக்கு இயல்பாகவே வெறுப்பில்லாமலிருந்ததால், எதற்கும் நான் மனம் சோர்ந்து போகவில்லை. ஆனல் கடந்த பதினைந்தாண்டுகளாக நூற்றுக்கணக்கான தமிழுணர்வுப் பாடல்களையும், தமிழக விடுதலைப் பாடல்களையும் கருத்துகளையும் ஆயிரக்கணக்கான பக்கங்கள் எழுதியும், பல நூற்றுக்கணக்கான கூட்டங்களில் பேசியும் வந்த என்னையே, நாங்கள் சிறையிலிருந்த ஒரு சில நாட்களுக்குள் அங்கிருந்த மறவர்களில் சிலர் ஐயுற்றுப் புறக்கணிக்கும் படியாக, அவர் நடந்துகொண்டது எனக்குப் பெரிதும் வியப்பளித்தது. ஆயினும், இருபது ஆண்டுகள் ஒரு கட்சியுடன் பழகி வளர்ந்து, ஒரு சில நாட்களில், நம்மைத் தெரிந்துகொண்டது போல் வந்து, நம்முடன் இணைந்து ஓரிரு வினைப்பாடுகளில் பங்கு கொண்ட அவரின் உணர்ச்சி நிலையைவிட, நம் மறவர்கள் சிலரின் பதினைந்தாண்டுப் பழக்கத்தின் முடிவு எனக்குப் பெரிதும் அதிர்ச்சியுறும்படி செய்யவில்லை. அரசியல் நாடகக் காட்சிகளுக்கு முன் என் மெய்யுணர்வு சான்ற உண்மை நடைமுறைகள் பயனற்றுப் போனது, எனக்கு மேலும் சில படிப்பினைகளையும், உறுதிப்பாடுகளையும் தந்தது. (அடியாரின் சிறை நடவடிக்கைகளையும், அவற்றுக்குரிய உள்முக நோக்கங்களையும் இங்கு விளக்குவதால் எந்தப்பயனும் விளைந்துவிடப் போவதில்லை. தேவையான விடத்து,–அவற்றையும் விளக்கவேண்டிய அழுத்தம் வரும்பொழுது–

விளக்கலாம். ஆனால், அவற்றையெல்லாம் ஒரு தீக்கனவுபோல் மறந்துபோகவே முயற்சி செய்கின்றேன்.)

மொத்தத்தில் சிறையிலிருந்த நாற்பத்தொன்பது நாட்களில் இறுதிப் பதினேரு நாட்களாக என் நடவடிக்கைகளில் நிறைவுறாதவர்களாகவும், அடியார் பாலும், அவர் இருந்த கட்சியின் பாலும் ஏற்கனவே ஓரளவு ஈடுபாடும், இக்கால் இணக்கமும் ஏற்படுத்திக்கொண்டவர்களாகவும் மாறியுள்ள ஒரு சிலர், இனிமேல் திரு அடியார் அவர்களுக்காகிலும், நம்பிக்கை யுடையவர்களாகவும், நன்றியுடையவர்களாகவும் நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனில் எந்த ஓரியக்கமும் வலுப்பெற வேண்டுமானல் அதன் கொள்கைகளில் முதற்கண் ஐயமற்ற தெளிவுவேண்டும். அடுத்து, அவ்வியக்க அமைப்பாளர்களிடத்து நம்பிக்கையுடனும், நன்றியுணர்ச்சியுடனும் நடந்துகொள்ளுதல் வேண்டும். அத்துடன், இயக்கத்தின் மேனிலை நடைமுறைகளுக்குக் கீழ்ப்படியும் கொள்கைக் கடைப்பிடியும் வேண்டும். ஒருவரைத் தலைவராகவோ, பொதுச் செயலாளராகவோ ஏற்றுக்கொண்டு விட்ட பின்னர், அவரின் கொள்கை நடவடிக்கைகளில் ஐயப்பாடு கொள்வதும், அவரைப் பற்றிக் குறைவாக மதிப்பிடுவதும், இயக்கத்தின் ஒருமைப்பாட்டையே சிதைத்து விடக்கூடிய செயல்களாகும் என்பதை இனியேனும் புதுக்குடி புகுந்த அன்பர்கள் உணர்ந்துகொள்ளக் கேட்டுக் கொள்கின்றேன்.

'அணைத்துப் போகாத தன்மை' என்பால் இருப்பதாக அவ்வன்பர்களில் ஒரு சிலர், தம் நெகிழ்ச்சித் தன்மைகளுக்குத் தாமே கரணியம் காட்டிப் பேசி வருவதை அறிகிறேன். இஃது என்மேல் உள்ள மிகப் பழகிய குற்றச்சாட்டு. இவர்கள் எனக்குப் புதியவர்களும் அல்லர்; அவர்களுக்கு நான் புதியவனுமல்லன். நேற்று இன்று தொடங்கியவல்ல என் நடவடிக்கைகள். கடந்த இருபது ஆண்டுகளாக என் இயக்கம் வெளிப்படையானது. மக்களின் மனத்தொடர்பும், அறிவுத் தொடர்பும், வினைத் தொடர்பும் எவ்வெவ் வடிப்படையில் நிகழ்கின்றன, வளர்கின்றன, முடிவுறுகின்றன என்பதை நான் நன்கு அறிவேன். அவ்வவ்வடிப்படையிலேயே 'எச்சிறு நிலையினையும்' எண்ணுகின்றேன் ; துணிகின்றேன் ; செயல்படுகின்றேன், நான் ! நாலே முக்காலடி உள்ள ஒரு கோலை ஐந்தடி உள்ளது என்றோ, நாலரையடி யுள்ளது என்றோ என்ஞல் என்றும் எந்த இடத்திலும் ஒப்புக்கொள்ள முடியாது. ஒருவரோடு அணைந்து போவதற்கேனும் அப்படி நான் சொல்லவேண்டும், என்று என்னை எதிர்பார்ப்பவர்களை நான் நிறைவு செய்யமுடியாது. போலி ஆரவார நிகழ்ச்சிகளையும், புரையோட்டப் போக்குகளையும் நான் என்றும் வரவேற்று மாலை சூட முடியாது. நடிப்பும், நயமான ஈரப்பேச்சும் என்னோடு பிறக்காதவை. பிறர் இழுத்த இழுப்புகளுக்கெல்லாம் நான் நீளவேண்டும் என்று எதிர்பார்ப்பதற்கு நான் இழுவையல்லன். பிறரும் அவ்வாறு நீண்டு வரவேண்டும் என்று எதிர்பார்ப்பவனுமல்லன். அவரவர்களின் அறிவுக்குப் பொருந்தும் செயல்களையே நான் அவர்களிடம் எதிர்பார்க்கின்றேன்.

ஓர் அறிவியல் அறிஞனுக்குப் போலவே கொள்கை எனக்குப் பெரிது; அதில் ஓர் இம்மியையும்—அது தவறு என்று உணராத பொழுது—பிறர்க்காக மட்டும் குறைத்துக் கொண்டு என்னால் ஈடுபட முடியாது. அதைச் செயலுக்குக் கொண்டுவர என் அறிவுக்குச் சரி என்று பட்ட எந்த நடவடிக்கையிலும் நான் நம்பிக்கையுடன் ஈடு பட்டு வருபவன். அந்நடவடிக்கை பிறர் அறிவுக்கும் சரி என்று பட வேண்டும் என்று எதிர்பார்ப்பவனும் அல்லன். தேவையானால் இரவு பகலாக என் கொள்கைகளைச் சரியான உணர்வு உள்ளவர்கள் என்று நான் கருதுபவர்களிடம் எடுத்து விளக்க இதுவரை தயங்கியதுமில்லை; இனித் தயங்கப்போவதுமில்லை. இந்த நிலையில் என்னொடு வந்து பொருந்துபவர்களை நான் தடுத்தவனுமல்லன்; பொருந்தாமல் விலகிப் போகின்றவர்களை நான் கெஞ்சியவனுமல்லன்.

வெட்டு ஒன்று, துண்டு இரண்டாகப் பேசுபவன் நான்; வினையிலும் அப்படியே! குழைவு நெளிவுகளால் என் கருத்தை என்றும் வயப்படுத்த முடியாது. கொள்கையை இறைவனாகக்கருதுகின்றேன். அக் கொள்கைப் போக்குடைய நேர் நோக்குடையவர்களை என் தோள் மேல் தூக்கிக்கொண்டு போகவும் தயங்கமாட்டேன். அமைச்சர்களைப் போய்ப் பார்க்கவும், அவர்களுக்கு மாலை சூட்டவும், அம்மாலைக்கீடாக எதையேனும் எதிர்பார்க்கவும் எனக்குத்தெரியாது. அவர்கள் பால் சலுகைகளை வேண்டுதல் என் வாழ்வில் என்றும் நேர்ந்ததில்லை; நேரவும் நேராது: பட்டத்திற்காகவோ, பதவிக்காகவோ என்னை எவரும் அடியார் ஆக்கிவிட முடியாது. நான் வெளிப்படையானவன். எந்த விளம்பரமும், கொழு கொம்பும் எனக்குத் தேவையில்லை. என்னை நானே நடத்திக்கொள்ள எனக்குத் தெரியும். உதவி வேண்டும் என்பதற்காகப் பிறர் கால்களை முத்தமிடும் பழக்கம் எனக்கில்லை. உதவி செய்தவர்களின் கைகளை நன்றியுடன் என்றும் கண்களில் ஒற்றிக்கொள்ளக் காத்திருப்பவன் நான். முடிந்தால் என் கொள்கைகளைச் செயற்படுத்துவேன். இல்லெனில் அவற்றுடன் என்னைப் புதைத்துக்கொள்வேன். மொத்தத்தில் என்னால் பலருக்கும் ஊதியமுண்டு, ஆனால், எவருக்கும் என்னால் இழப்பில்லை. இந்தக் குணங்கள் ஒரு விடுதலை மறவனுக்குத் தேவையில்லையென்றால், அவனுக்கு விடுதலை உணர்வும் தேவையில்லை என்பதே என் முடிவு.

ஏனெனில் இவைதாம் ஒருவனைத் தம் கொள்கைப் பிசிர்களினின்று காப்பவை; தம் கடமையைப் பிறர்க்கு விலை போக்குவதினின்றும் தடுத்து நிறுத்துபவை. எனவே, இவற்றை என்றைக்கும் ஒத்துப் போகாத தன்மை என்றோ, அணைத்துக் கொள்ளாத தன்மை என்றோ குறைத்து மதிப்பிட வேண்டா. ஒத்துப் போகின்ற தன்மைகள் வேறு; அணைத்துக் கொள்கின்ற தன்மைகள் வேறு. கொள்கை நெகிழ்ச்சி என்பதெல்லாம் பொறுத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கலாம்; மறந்துவிடக் கூடியதாகவும் இருக்கலாம்; ஆனால் இயக்கத்துக்கு ஏற்றவையாக ஒப்புக்கொள்ளக் கூடியனவல்ல.

இனி, கொள்கையிலும் சில நெகிழ்ச்சிகள் இருக்கலாம் என்பவர்களும் சிலர் உண்டு. அந்த நெகிழ்ச்சி நிலைகள் முற்றும் அவர்களைப்

பொறுத்த செய்தி. அந்த நிலையே பிறர்க்கும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதும், அதற்கு இயைபாக நானும் நடந்துகொள்ள வேண்டும் என்று கட்டியங் கூறிப் பேசுவதும் எனக்கு ஒத்துவராத செய்திகள். எனவே, ஒத்துப் போகாத ஒன்றை எதனுடைய அடிப்படையில் என்று கவனிக்க வேண்டுமே தவிர, எட்டா முட்டித்தனமாக அஃது எல்லா நிலையிலும் இருக்கவேண்டும் என்று முரண்டு பிடிப்பது, அறியாமையும், வினைப்பிதுக்கமும் ஆகும்; அறிவுடைமையும் வினைத்திறமும் ஆகாது.

இனி, இறுதியாகக் கடந்த விடுதலை மாநாட்டினின்று நான் தெரிந்துகொண்ட உண்மைகள் ஒரு சில உண்டு. அவற்றுள் ஒன்று, இக்கால், தமிழக விடுதலையை எவரும் அறிவு நிலையாகவோ, உணர்வு நிலையாகவோ விரும்பவில்லை. இயக்க நிலையாகவேவிரும்புகின்றனர் என்பதே. அப்படி விரும்புகின்றவர்களும் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ள விழைபவர்களாகவே இருக்கின்றனர். வெறும் விளம்பரத்திற்காகவோ, புகழுக்காகவோ விடுதலையை விரும்புகின்ற நெஞ்சங்கள், அவை வாய்க்காத விடத்து, அவ் விடுதலையையும் தவிர்க்கின்ற உணர்வு கொள்பவையாகத்தான் இருக்க முடியும். விடுதலையை ஓர் உயிராக்க நிலையாக விரும்புகின்றவன் எவனோ, அவன் முதலில் தன்னை எல்லாவகைத்தளைகளினின்றும் கட்டறுத்துக் கொள்பவனாக ஆக்கிக்கொள்ளுதல்வேண்டும். அந்நிலையே தான் மன நிறைவுடன் ஒப்புக்கொண்ட கொள்கைக்குக் கட்டுப்பட்டு நடக்கும் மனப்பாங்கை வளர்த்துக்கொள்ளப் பயன்படுவதாகும். அம்மனப் பாங்கு வளரும் வரை தமிழினத்தை எவராலும் ஒன்றுபடுத்திவிட முடியாது. தமிழக விடுதலையும் எட்டாத ஒரு கனவாகவே போய் விடும் என்று எச்சரிக்க விரும்புகின்றேன்.

இனி, கொள்கைமேல் நம்பிக்கை வைத்துள்ள நம் விடுதலை இயக்க மெய்யன்பர்கள் தொடர்பாகவும், அவர்கள் இனி நடந்து கொள்ள வேண்டிய வினைகள் தொடர்பாகவும் அடுத்து வரும் இதழ்களில் பேசுவோம்.

பெருஞ்சித்திரன்.

## தமிழ் மறவர்கள் விடுதலை.

மூன்றாவது தமிழக விடுதலை மாநாட்டுத் தொடர்பாகச் சிறைக் காவலில் வைக்கப் பெற்றிருந்த தமிழக விடுதலை மறவர்கள் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் உள்பட இருபத்திருவரும், நாற்பத்தொன்பது நாள்களுக்குப்பின், 28—8—75 அன்று விடுதலை செய்யப்பெற்றனர்.

—அமைச்சர்.

# அறிவியல் நெறிமுறை வரையறைகள் - பூதநூல்.

இல. க. இரத்தினவேல்,
(பூதவியல் துறை: பெரியார் கல்லூரி, திருச்சி-20.)

## 4. பாய்ம விசை நிலைப்பியல் *
## (FLUID STATICS)

**1.** இறுக்கம் (Thrust): ஒரு தளப் பரப்பின் மீது செயற்படும் மொத்தக் குத்துவிசை (Total Normal Force) யே இறுக்கம்.

ஒருதளப் பரப்பின் மீது செயற்படும்
மொத்தக் குத்து விசையே இறுக்கம்.

**2.** அழுத்தம் (Pressure):

ஓர் அலகுச் சதுரப் பரப்பின்மேல் செயற்படும்
மொத்தக் குத்து விசையே அழுத்தம்.

**3.** நிலவளி யழுத்தம் (Atmospheric Pressure):

நிலப்பரப்பில் ஓரலகுச் சதுரத்தின் மீது
நிற்கின்ற காற்றின் எடை நிலவளியின் அழுத்தம்.

**4.** ஆர்க்கிமிடீசின் நெறிமுறை (Archimede's Principle)
ஆர்க்கிமி டீசின் நெறிமுறை யாவது:

நிலைப்பில் உள்ள நீரத்துள் மூழ்கும்
பொருள், பெறும் மேனேக்(கு) இறுக்கம் (அ∴ தாவது
அப்பொருள் அடையும் எடையிழப்பு) அதனால்
இடம்பெயர் நீர எடைக்குச் சமமே!

**5.** மிதக்கும் பொருளின் சமநிலைக்கான இரு தகுதிகள் (Conditions for equilibrium of a Floating body):

1. மிதவை சமஎடை நீரத்தைவேறிடம் போக்கவேண்டும்.
2. மிதவையின் ஈர்ப்புநடுவம் (Centre of gravity) இடம் பெயர் நீரத்தின் மிதப்புநடுவ (Centre of buoyancy)த் துடன் செங்குத்துக் கோட்டில் அமையவேண்டும்.

---

* பாய்மம் (Fluid) என்பது நீரத்தையும் (Liquid) வளிமத்தையும் (Gas) குறிக்கும். பொதுச்சொல் நீர விசைநிலைப்பியலையும் வளிமவிசை நிலைப்பியலையும் இணைத்த படிப்பைச் சற்றும் உணராது 'திரவஇயல்' என்று சொற்பிழையுடனும், பொருட் பிழையுடனும் பெயரிட்டதோடு அமையாது 'திரவ இயல்' என்றே பயன்படுத்தவேண்டும் எனக் கட்டளையிடுவாரை என் செய்வது? இதற்கு ஒத்துத் தாளம் போடும் மதியிலரை எதற்கு ஒப்பிடுவது?

[கலித்துறை]

மிதக்கும் பொருளின் சமநிலைக் கான இருதகுதி :
மிதவை சமஎடை நீரத்தை வேறிடம் பேர்க்கவேண்டும்
மிதவை தனின்ஈர்ப்பு நடுவம். இடம்பெயர் நீரமதின்
மிதப்புநடு வத்துடன் செங்குத்துக் கோட்டில்
[அமையவேண்டும்.

6. பாயில் நெறி (Boyle's law):

நிறையும் வெப்ப நிலையும்மா றுத
வளிமம் ஒன்றின் அழுத்தமும் பருமமும்
பெருக்கிய தொகை,ஒரு மாறிலி யாகும்.

## 5. வெப்பவியல் (HEAT)

### 5·1 வெப்ப(த்தால் ஏற்படும்) விரிவு (Thermal expansion)

1. நீள் விரிவம் (Linear expansivity): ஓர் அலகு வெப்ப நிலை உயர்வால், ஒரு பொருளின் நீளத்தில் உண்டாகும் விரிவுக்கும், தொடக்க நீளத்துக்கும் உள்ள தகவு (Ratio) நீள் விரிவம் ஆகும்.

2. பரப்பு விரிவம் (Areal or Superficial expansivity): ஓர் அலகு வெப்ப நிலை உயர்வால் ஒரு பொருளின் பரப்பினில் உண்டாகும் விரிவுக்கும், தொடக்கப் பரப்புக்கும் உள்ள தகவுதான் பரப்பு விரிவம்.

3. பரும விரிவமும் (Volume expansivity): இவ்வாறே.

[ஆசிரியத் தாழிசை] *

1. ஓர்அலகு வெப்பநிலை உயர்வால்ஓர் பொருளின்
நீளத்தில் உண்டாகும் விரிவுக்கும் தொடக்க
நீளத்துக் கும்உள்ள தக வு,நீள்விரிவம் ஆகும்.

2, ஓர்அலகு வெப்பநிலை உயர்வால்ஓர் பொருளின்
பரப்பினிலே உண்டாகும் விரிவுக்கும் தொடக்கப்
பரப்புக்கும் உள்ள தகவு தான்பரப்பு விரிவம்.

3. ஓர்அலகு வெப்பநிலை உயர்வால்ஓர் பொருளின்
பருமத்தில் உண்டாகும் விரிவுக்கும் தொடக்கப்
பருமத்துக் கும்உள்ள தக வு,பரும விரிவம்.

---

* 'தாழிசை' ஒரு பொருள் மேல் மூன்று அடுக்கி வருவன சிறப்புடையன. (காரிகை கூசு—உரை)

**4.** நீரத்தின் தனிப்பரும விரிவெண் அல்லது மெய் விரிவம் (Coefficient of absolute expansion or Real expansivity of a liquid) : ஓர் அலகு வெப்பநிலை உயர்ச்சியனுல், குறித்த நிறை நீரத்தின் சார்பற்ற பரும விரிவுக்கும், அதன் தொடக்கப் பருமத்தினுக்கும உள்ள தகவு மெய் விரிவம் என வழங்கும் சார்பிலாப் பரும விரிவெண் ஆகும்.

**5.** தோற்ற விரிவம் அல்லது சார் விரிவம் (Apparent expansivity) : ஓர் அலகு வெப்ப நிலை உயர்வால் கொள்கலத்துள்ள நீரத்தின குறித்த நிறைப் பருமத்தில் வெளிப்படையாய்த் தோன்றும விரிவுக்கும் அதன் தொடக்கப் பருமத்தினுக்கும் ஆம்தகவே தோற்ற விரிவம் என்ற சார்விரிவம்.

*[இணைத்தரவு—பல விகற்பம்]*

ஓரலகு வெப்பநிலை உயர்ச்சியினுல் குறித்தநிறை
நீரத்தின் சார்பற்ற பருமவிரி வுக்கும்அதன்
தொடக்கப்பரு மத்தினுக்கும் உள்தகவு மெய்விரிவம்
எனவழங்கும் சார்பிலாப் பருமவிரி வெண்ஆகும்.

ஓரலகு வெப்பநிலை உயர்வால்கொள் கலத்துள்ள
நீரத்தின் குறித்தநிறைப் பருமத்தில் வெளிப்படையாய்த்
தோன்றும்விரி வுக்கும்அதன் தொடக்கப்பரு மத்தினுக்கும்
ஆம்தகவே தோற்றவிரி வம்என்ற சார்விரிவம்.

6. வளிமத்தின் பரும விரிவமும் அழுத்த விரிவமும் (Volume expansivity and pressure expansivity of a gas) :

*[இணைத் தரவு—பல விகற்பம்]*

அழுத்தநிலை மாருக்கால் குறித்தநிறை வளிமத்தின்
பருமத்தில், ஓரலகு வெப்பநிலை உயர்ச்சியினுல்
உண்டாகும் விரிவுக்கும் இயல்வெப்ப நிலையில்அதன்
பருமத்துக்கும் ஆம்தகவு **பருமவிரி வம்**ஆகும்.

பருமநிலை மாருக்கால் குறித்தநிறை வளிமத்தின்
அழுத்தத்தில், ஓர்அலகு வெப்பநிலை உயர்ச்சியினுல்
உண்டாகும் விரிவுக்கும் இயல்வெப்ப நிலையில்அதன்
அழுத்தத்துக் கும்ஆம்தகவு **அழுத்தவிரி வம்**ஆகும்,

[இயல் வெப்பநிலை—Standard temperature-273·16 கெல்வின்]

**7.** பாயில் நெறி (Boyles law) : வெப்பநிலை மாருக்கால் குறித்த நிறை வளிமததின் பருமம், அதன் அழுத்தத்துக்கு எதிர்த் தகவாய் மாறுபடும்.

**8.** சார்லசு நெறி (Charles' law) 1 : அழுத்த நிலை மாருக்கால், குறித்த நிறை வளிமத்தின் பருமம், அதன் மெய் வெப்பநிலைக்குத் (Absolute temperature) தக மாறுபடும்.

9. சார்லசு நெறி 2: பருமநிலை மாறுங்கால், குறித்த நிறை வளிமத்தின் அழுத்தம், அதன் மெய்வெப்ப நிலைக்குத் தக மாறுபடும்.

[ஆசிரியத் தாழிசை]

"வெப்பநிலை மாறுங்கால் குறித்தநிறை வளிமத்தின்
பருமம்அதன் அழுத்தத்துக்கு எதிர்ந்தகவாய் மாறுபடும்"
என்பதுவே வளிமவிரி வுக்கான பாயில்நெறி

வளிமவெப்ப நிலைச்சார்பை வரையறுக்கும் சார்லசுநெறி
1. "அழுத்தநிலை மாறுங்கால் குறித்தநிறை வளிமத்தின்
பருமம்அதன் மெய்வெப்ப நிலைக்குத்தக மாறுபடும்

வளிமவெப்ப நிலைச்சார்பை வரையறுக்கும் சார்லசுநெறி
௨. பருமநிலை மாறுங்கால் குறித்தநிறை வளிமத்தின்
அழுத்தம்அதன் மெய்வெப்ப நிலைக்குத்தக மாறுபடும்.

## 5·2. வெப்ப அளவியல் (Calorimetry)

1. வெப்பக் கொண்மை (Thermal capacity or heat Capacity): ஒரு பொருளின் வெப்பநிலையினை ஒரு கெல்வின் உயர்த்தத் தேவைப்படும் வெப்பத்தின் அளவு அதனுடைய வெப்பக் கொண்மை எனப்படும்.

[இரு விகற்ப வஞ்சி மண்டலம்]

ஒருபொரு ளின்வெப்ப நிலையினை
ஒருகெல்வின் உயர்த்தத்தே வைப்படும்
வெப்பத் தின்அளவுஅ தனுடை
வெப்பக் கொண்மைஎ னப்படும்.

2. வெப்பயெண் அல்லது தனி வெப்பக்கொண்மை (Specific heat capacity): ஓர் ஆயிரம் சீரெடை பொருளினை ஒரு கெல்வின் உயர்த்தத் தேவைப்படும் வெப்பத்தின் அளவு அதன் தனி வெப்பக் கொண்மை எனப்படும்.

[பல விகற்ப வஞ்சி மண்டலம்]

ஓர் ஆயிரம் சீரெடை பொருளினை
ஒருகெல்வின் உயர்த்தத்தே வைப்படும்
வெப்பத் தின்அளவு அதன்தனி
வெப்பக் கொண்மைஎ னப்படும்.

3. வெப்பச் சமநீர் (Water equivalent): ஒரு பொருளின் வெப்பச் சமநீர் என்பது, அப்பொருளின் சமவெப்பக் கொண்மையைக் கொள்ளும் நீரின் நிறையேயாகும்.

ஒருபொரு ளின்வெப்பச் சமநீர் என்பது
அப்பொரு ளின்சம வெப்பக் கொண்மையைக்
கொள்ளும் நீரின் நிறையே யாகும்.

4. உருகுதலின் மறை வெப்பயெண் (Specific latent heat of fusion): உருகுநிலை மாறுத வெப்ப நிலையில் ஆயிரம் சீரெடை திடபொருள் முழுக்க உருக ஈர்க்கும் வெப்ப அளவு, அப்பொருள் உருகுதலின் மறைவெப்பம் எனப்படும்.

*[பல விகற்பக் கலி மண்டிலம்]*

உருகுநிலை மாறுத வெப்ப நிலையில்
ஆயிரஞ்சீரெடை திடப்பொருள் முழுக்க
உருக ஈர்க்கும் வெப்ப அள(வு) அப்
பொருள்உரு குதலின்மறை வெப்பம் எனப்படும்.

5. ஆவியாதலின் மறைவெப்ப யெண் அல்லது தனி மறைவெப்பக் கொண்மை (Specific latent heat of Vaporisation): மாறுத கொதிநிலை வெப்பநிலையில், நீரத்தின் ஓர் ஆயிரஞ் சீரெடை நிறை முழுக்க ஆவியாவதற்குத் தேவையாகும் வெப்பம் ஆவியாதலின் தனிமறை வெப்பக் கொண்மை (மறை வெப்பயெண்) ஆகும்.

*[பல விகற்பக் கலி மண்டிலம்]*

மாறுத கொதிநிலை வெப்ப நிலையில்
நீரத்தின் ஆயிரஞ் சீரெடை நிறை முழுக்க
ஆவியா வதற்குத் தேவையாம் வெப்பம்
ஆவியா தலின் தனி மறைவெப்பக் கொண்மையாம்.

## 5·3. ஆவியழுத்தம்.

1. நிறைச்செறிவு ஆவியழுத்தம் (Saturated vapour pressure): குறித்தவொரு வெப்பநிலையில் கருதும் ஒரு நீரத்தின் (liquid) நிறைச்செறிவு ஆவி செலுத்தும் அழுத்தம் அந்நீரத்தின் 'நிறைச்செறி வாவி யழுத்தம்' எனப்படும். இவ்வுச்ச அழுத்தமும் வெப்பநிலை உயர்ந்தால் அதிகரித்திடும்.

*[பல விகற்பக் கலிநிலைத் துறை]*

குறித்தவோர் வெப்ப நிலையில் கருதும்ஓர் நீரத்தின்
நிறைச்செறி வாவி செலுத்தும் அழுத்தம்அந் நீரத்தின்
நிறைச்செறி வாவி யழுத்தம் எனப்படும் இவ்வுச்ச
அழுத்தமும் வெப்ப நிலையுயர்ந் தால்அதி கரித்திடுமே,

2. துளி நிலை (Dew point): நீர் ஆவி* (Water vapour) நிறைச் செறிவு ஆவியாகும் வெப்பநிலையே துளிநிலை ஆகும்.

நீர்ஆவி நிறைச்செறி(வு) ஆவி யாகும்
வெப்ப நிலையே துளிநிலை ஆகும்.

---

* *நீராவி*—Water vapour; *வெய்யாவி*—Steam.

3. ஒப்பு ஈரப்பதம் (Relative humidity): துளி நிலையிலும் நிலவளி வெப்ப நிலையிலும (Atmospheric temperature) நீராவி செலுத்தும் அழுத்த இடைத்தகவு ஒப்பு ஈரப்பதன் எனச் செப்பப்படும்.

துளிநிலை யிலும்நில வளிவெப்ப நிலையிலும்
நீராவி செலுத்தும் அழுத்த இடைத்தகவு
ஒப்(பு)ஈரப் பதன்எனச் செப்பப் படுமே!

## 5·4. வெப்பப் பரவல்.

1. வெப்பக்கடத்துகை (Thermal Conduction):

2. வெப்பச் சலனம் (Thermal convection).

பொருளின் துகள்கள் இடம்பெய ராது
வெப்பத்தைக் கடத்தல் வெப்பக் கடத்துகை.

வெப்பச் சலனமோ பொருளின் துகள்கள்
இடம்பெயர்ந்து திரிந்து வெப்பத்தைப் பரப்பல்.

3. வெப்பநிலைச் சரிவம் (Temperature gradient): என்பது வெப்பநிலை வேறுபாட்டின் தொலைவு மேனி.

வெப்பநிலைச் சரிவம் என்பது வெப்பநிலை
வேறு பாட்டின் தொலைவு மேனி.

4. மாறு நிலை (Steady state): பொருளின் வெப்பச் சரிவம் மாறுத வெப்பச் சூழ்நிலை மாறுநிலை ஆகும்.

பொருளின் வெப்பச் சரிவம்மா றுத
வெப்பச்சூழ் நிலை'மா றுநிலை' யாகும்.

5. வெப்பக் கடத்தம் அல்லது வெப்பக் கடத்தெண் (Thermal conductivity or Coefficient of thermal conduction): கருதும் பொருள் ஓரலகு வெப்பச் சரிவத்தில் இருக்கும்போது, அதன் ஓரலகுப் பரப்பு ஊடாகக் கடக்கும் வெப்ப அளவுக்கு அப்பொருளின் வெப்பக் கடத்தம் அல்லது வெப்பக் கடத்தெண் எனப்பெயர்.

[இரு விகற்பக் கலிநிலைத் துறை]

கருதும் பொருள்ஓர் அலகு வெப்பச் சரிவத்தில்
இருக்கும் போது(அ)தன் ஓர்அல குப்பரப்(பு) ஊடாகக்
கடக்கும் வெப்ப அளவுக்(கு) அப்பொரு ளின்வெப்பக்
கடத்தம் அல்லது வெப்பக் கடத்தெண் எனப்பேரே!

—[தொடரும்.]

# * ஏற்றம் புதுக்கிட வாருங்களே!

தண்டமிழ்த் தாய்பெறும் துன்பத்தினும், பெற்ற
தாயின் துயரம்மிகப் பெரிதோ?—நில
மண்டில மெங்கணும் வாழ்ந்தவள்தான்—இன்று
வாழ்க்கை மெலிந்துடல் சோர்ந்துவிட்டாள்!

அமிழ்தமெனும் தமிழ் வாய்மொழியைவிட
அன்னையின் வாய்ச்சொல் இனிப்பதுண்டோ?—செங்
குமுதஇதழ்த் தமிழ் வாய்திறந்தால்—ஒரு
கோடி நரம்பும் சிலிர்க்காவோ?

ஓங்குதமிழ்ப் புகழ்நல்லினத்தை விட
உற்றார் தொகையும் மிகப்பெரிதோ?—துயர்
தேங்கு மனத்துடன் நீணிலம் யாங்கணும்
தேடிப் பிறர்நிலம் ஓடிவிட்டார்!

வீடுநிறை தமிழ்நாட்டைவிட, நம்மைப்
பெற்றவர் ஆளும், மனைபெரிதோ?—பெருங்
காடும்மலையும் நிலங்களும் பூமலர்க்
காவும் விளங்கிடக் காண்கிலிரோ?

மாகுன்றத் தோளால்தமிழ் நலங்காத்தலின்
மனைவியின் நல்லுற(வு)ஆங் கினிதோ?—போரில்
போகின்ற நல்லுயிர் செந்தமிழ் நூலொன்றைப்
புரந்ததெனில் இன்பம்வேறும் உண்டோ?

கொல்லிமலைதரு தேன்தமிழ் இன்பினும்
குழந்தைகள் இன்பம் மிகப்பெரிதோ?—ஒரு
சொல்லில்தொடரில் இயங்கிடும் பாக்களில்
சொக்கும் இன்பம் மக்கள் பாலுளதோ?

வீரத்தமிழினம் மாய்ந்தகதை யெண்ணி
வெம்புகிறேன்; உயிர் மங்குகிறேன்!—ஒரு
சேரத்தமிழர் எழுந்து விட்டால்—பழஞ்
செந்தமிழ்த்தாய் நலங் காண்கிலளோ?

தோய்துயர்தூவிய கொத்தடிமை யின்னுந்
தொலையாப் பெரும்பகை யாவையுமே—தமிழ்த்
தாய்தரும் பிள்ளைகள் தோள்களன்றோ,வந்து
தாங்கி யழித்திடல் வேண்டுமிங்கே!

வீரம்சிலிர்த்திடும் தோளெழுவீர் பெரும்
வெற்பு மலைந்திடும்போர் புரிவீர்!—தமிழ்
ஈரம்கசிந்திடும் நெஞ்சங்களே! பண்டை
ஏற்றம் புதுக்கிட வாருங்களே!

---

* *இப்பாடலின் பொருளையே கொண்டதும், வேறு இசையில் அமையப் பெற்றதுமான பாடலொன்று இவ்விதழின் பிறிதொரு பக்கத்தில் அச்சாகியுள்ளது,*

சுவடி: 12—ஓலை: 8-ன் தொடர்ச்சி :

### தமிழக முதல்வர்,
## திருமிகு. அருட்செல்வனார் அவர்கள்
### முன்னிலையில் நிகழ்ந்த, பாப்பட்டி மன்றம்.

# திரு. வி. க. வாழ்வில் பெரும்பங்கு கொண்டது மொழித்தொண்டா, பொதுத்தொண்டா?

**முடிவுரை :**

இதுவரை இளஞ்சேர னார்இறைக் குருவனார்
புதுமுறை யால்-தொல் காப்பியப் புலவனார்
மூவரும் திரு.வி. க -வெனும் முனிவனை
யாவரும் வியக்க மொழியா சிரியனாய்க்
காட்டி நின்றதும்,
கவின்மிகு புலவர்
பாட்டியல் வல்லவர் பாலசுந் தரனார்
பன்னீர்ச் செல்வனார் ஞானச் செல்வனார்
அன்னவர் மக்கள் அருந்தலை வரேயென
நாட்டி நின்றதும்,
நாமவர் பாக்களில்
ஓட்டிய உள்ளம் ஓரடி பெயராமல்
கேட்டு நின்றதும் கிளுகிளுப் புற்றதும்
வாட்டிய கோடைக்கு வந்த மழையால்
உயிர்தழைப் பெய்திய உயர்ந்த நிகழ்ச்சி!

மொழித்தொண் டென்று முழக்கிய முன்னணி
வழித்தொடர் புற்ற கருத்துகள் வருமாறு :

இளஞ்சேரர் அணியோ எந்தமிழ்த் தென்றல்
திரு.வி.க. எனும்பெயர் ஏற்ற தாலே

தமிழ்த்தொண் டாற்றி தகுபடிமம் பெற்றார்!
பொதுத்தொண் டாற்றியா புகழ்தனை பெற்றார்!
என்று கொள்கை எடுத்துக் கூறும்!
பொதுத்தொண் டென்று பொருதிய மாற்றணி
புதுக்கிய கருத்துகள் புலப்படும் வகையிது :
இளவழ கர்தம் அணியோ அண்ணல்
திரு.வி. க,நம் தீந்தமிழ் மொழியைக்
கருவியாக் கொண்டன ரேனும் ஆங்கவர்
பொதுநலத் தொண்டே பொலிவுற் றுயர்ந்த[து]
இதுமெய் என்றே எடுத்து மொழியும்!
பட்டி மன்றம் பயனுறக் காட்டிய
நெட்டமை கருத்துக்கு நேரிய தலைவராய்
இருந்த தலைவர் திரு.வி. க.எனும்
அருந்தமிழ் ஆசான்! அவர்தம் வாழ்க்கையோ
தமிழ்முனி வாழ்க்கை! தவறிலா வாழ்க்கை!
அமிழ்த நெஞ்சினால் அமைந்தநல் வாழ்க்கை!

அன்னவர் வாழ்க்கையால் தமிழ்அழ கூற்றது !
நன்னரும் மேடைப் பேச்சு நயந்தது !

இனிய உரைநடை ! எழில்தவழ் நறுந்தமிழ் !
கனியும் அன்பினால் கனிந்தசொற் பொழிவு !
மக்களை எழுப்பி மனத்தைத் திறந்தது !
தக்க கருத்தினால் தாளிகைத் தொண்டு
மிக்கச்சிறந்தது ! தமிழ்நலம் மீண்டது !
துயருற் றிருந்த தொழிலா ளர்கள்
மயலற நீங்கி மாண்புறப் பெற்றனர் !
பொதுமைக் கழகம் பொலம்பொலம் தோன்றி
புதுமைக் கருத்துகள் விளைத்துப் பொலிந்தன.

இந்திய நாட்டில் இதுவரை இல்லா
முந்துதொழிற் கழகம் முதன்முதற் கண்டனர் !
தொழிலாளர் இயக்கம் தோன்றிய பின்னை
வழியிலா வாழ்க்கை வழிகண் டுய்ந்தனர் !

சாதிக ளற்ற சமயப் பொதுமையால்
மோதல் குறைந்து முழுவலி திரண்டது.

பற்பல நூற்கள் பாவிலும் உரையிலும்
நூற்புல வோர்பலர் நயக்க எழுதி
பொய்மைக் கருத்துகள் புதைவுறச் செய்து
மெய்ம்மை நாட்டிய மேலவ ராயினர்.

சமயத் தொண்டினும் நாட்டுத் தொண்டினும்
அமைவுற் றிலங்கிய அருந்தமிழ்த் தொண்டினும்
புதுமைத் திருத்தம் புகுத்திய வகையினும்
பொதுமை அரசியல் புகன்ற நெறியினும்
தொழிற்பே ரியக்கம் தொடங்கிய திறத்தினும்
எழிலுறத் தாளிகை இயற்றிய முறையினும்
திரு.வி. க.-வெனும் திருத்தகு முனிவோன்
பெருவிறல் மறவனாய்ப் பிழையா தொழுகினான் !

அன்ன முனிவோன் ஆற்றிய தொண்டினில்
என்னென்ன சிறந்தவை ! என்னென்ன குறைந்தவை
என்றெடுத் தியம்பல் இயலாது எவர்க்கும் !
இயம்பற் பிழையால் எடுத்த கருத்து
மயங்கல் அடைவதும் மங்கல் அடைவதும்
நேருமே யன்றி நிகழ்த்திய தொண்டினில்
யாரும் ஏற்றமும் தாழ்வதும் யாக்கிலர் !
கதிருள் ளளவும் காற்றுள் ளளவும்
அதிரா நின்ற திரு.வி. க.-எனும்
மேதகு தலைவன் முனிவன் மிழற்றிய
தீதரு தொண்டின் திறங்குறை யாது !
காணுங் குறையெலாம் காண்பவர் குறையே !
காணும் நிறையெலாம் காட்சியின் நிறையே !
பெரியோன் தொண்டின் பெரும்பங்கு என்பதால்

உரியோ ரெல்லாம் தங்கருத் துரைத்தனர்!
மொழித்தொண் டேஎன அவரை மொழிந்தவர்
மொழிப்பற் றாலே அங்ஙன் மொழிந்தனர்!
பொதுத்தொண் டேஎன அவரைப் பேசியோர்
பொதுத்தொண் டார்வமோ டங்ஙன் பொழிந்தனர்!

இருவகை யோர்க்கும் ஏற்ற தொண்டராய்
அருமைத் தலைவராய் அவர்வாழ்ந் திருந்தார்!

ஏற்றவோர் கருத்தை இருபுடை தாங்கி
ஏற்றமும் இறக்கமும் கண்டிடும் இயல்பினால்
தக்க அறிஞரும் தகுபுல வோரும்
ஒக்க ஆய்ந்திரு கூறாய் உரைத்தனர்!
இருதிறத் தாரும் ஏற்க உரைத்ததை
ஒருதிறப் படுத்தி உரைப்பது கடினமே!
ஒருதிறம் போற்றின் ஒருதிறம் குன்றும்!
ஒருதிறம் கொள்ளின் ஒருதிறம் எஞ்சும்;
ஆய்பொருட் பெருமையால் ஆய்வு சிறந்தது!
மாய்பொரு ளென்னின் பெருமைமாய்ந் திருக்கும்!

தொட்டவர் கையும் மனமும் துலக்குறும்
மட்டறு சிறப்பின் மணவழ கோனை
எதனில் உயர்ந்தோன் எதிற்சிறந் தோன்-என
அதனதன் சீர்சொல்லி ஆய்வுரை கூறுதல்
எம்மோர்க் கரியதே! இருப்பினும் ஈண்டு
நம்முடை ஈரணி நாட்டிய திறத்தினை—
கருத்து வலிவினை ஆய்ந்து கழறுதல்
பெருத்த மகிழ்ச்சியாம்! பிழையிலாச் செயலாம்!

தமிழ்த்தென்றல் மனத்தினராய்!
தளராத பொதுத்தொண்டு செய்தார் அண்ணல்!
தமிழ்நாட்டின் அரசியலில்
தக்கதிறங் காட்டிநலம் சேர்த்தார் அன்னார்
தமிழருக்குத் திரு.வி.க.
கலங்கரையின் திருவிளக்கு! ஒளிவிளக்கு!
தமிழ்மனத்தால் பொதுத்தொண்டில்
தமைநனைத்துக் கொண்டவர்தாம் தமிழின் தென்றல்!

பயனுற முடிந்த பாப்பட்டி மன்றினை
நயனுறு வகையில் நடத்திய இயற்றமிழ்ப்
பயிற்றகத் தார்க்கும்—அதைப்—பயிற்றுறும் ஆசான்
குயிற்றமிழ்ப் புலவன் சரவணத் தமிழர்க்கும்—
பாத்திறத் தோடு பட்டி மன்றினில்
நாத்திறம் நாட்டிய நற்புல வோர்க்கும்—
விருந்துத் தமிழை விழுமிய அமைவோ(டு)
இருந்து கேட்ட உங்கள் எல்லார்க்கும்
அன்புற நன்றியும் அமைவுற வணக்கமும்
இன்புறக் கூறி இதனை முடிப்பேன்!

o

# சமற்கிருதமா
# இந்திய மொழிகளின் தாய்?

பா. திருநாவுக்கரசு, பொறி.இ.(கன்னடம்)

1972 சனவரி 24 - ஆம் நாள் 'இந்து' நாளிதழில் வந்த செய்தி:

"சமற்கிருதத்தை நாட்டு மொழியாக்க வேண்டுமென்ற கோரிக்கையை நடுவணரசு சுற்றுலா மற்றும் குமுகவான் துறை அமைச்சர் பர். கரன்சிங் விடுத்துள்ளார். உலக சமற்கிருத மாநாட்டில் அவர் பேசுங்கால சமற்கிருதம் எல்லா இந்திய மொழிகட்கும் தாய் மட்டுமல்லாது மதம், நாகரிகம், கல்வி ஆகியவற்றிற்கு உயிர் கொடுத்ததுவாகுமென்றும், அதனைக் கட்டாய பாடமாக்கி அலுப்பற்ற முறையில் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்றும் கூறினர்".

இக்கூற்றில் பொதிந்துள்ள அறிவுடைமையை நோக்குவோம். இவ்விலவய 'நான்கு மொழித்திட்ட' அறிவுரையை அமைச்சர் எல்லா மாநிலங்கட்கும் (ஒருவேளை தமிழ்நாடு நீங்கலாக) வழங்கியிருப்பது ஓர் உயர்தர செபபிடு விளையாட்டைப் போன்றுள்ளது. கடல் நீரை இனிப்புள்ளதாக ஏற்றுக் கொள்ளுவோமாயின், சமற்கிருதம் இந்திய மொழிகளின் தாய் என்றோ அல்லது மாற்றும் பாட்டி என்றோ ஏற்றுக்கொள்ளலாம்.

## மற்றவர் கூற்று :

சமற்கிநதப் பற்றுளர் இவ்வகையில் தம் அரைகுறை ஆராய்ச்சியை வெளிப்படுத்துதல் முதன்முறையன்று. 1971 சூன் 3-ஆம் நாள், சென்னையில் பேசிய பர். சுநீதிகுமார் சட்டர்சி, "திராவிட மொழிகள் சமற்கிருதத்திற்குப் பிறந்து, அதன் மடியில் வளர்ந்தவை" என்று கூறியுள்ளார். உலக சமற்கிருத மாநாட்டில், சமற்கிருதத்தைத் துவக்க, அல்லது இடைநிலைப் பள்ளியிலிருந்தே கட்டாயப் பாடமாக்க, மாநில அரசுகளுக்குக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. அண்மையில் காஞ்சி சங்கராச்சாரி அடிகளார், 'சமற்கிருதமே இந்திய இணைப்பு மொழிக்கேற்றது' என்று கூறியுள்ளார்.

## தமிழ்—திராவிட (தமிழிய) மொழிகள் தனித்தவை ;

திராவிட மொழிகள் (தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் பல) வழக்கற்றுப்போன சமற்கிருதத்தின் குழந்தைகளல்ல என்பதைப் புரிந்துகொள்ள, மொழியியல் ஆராய்ச்சியோ அதற்குரிய தகுதியோ, அறிவுத் திறமையோ தேவையில்லை. நடுவணரசு வெளியீடான 'இந்தியா-மொழிகள்' எனும் ஆங்கில இதழில், "திராவிட மொழிகள் இபல்பாகத் தோன்றியவை" என்ற ஐயத்திற்கு இடமின்றி நிறுவப்பட்டுள்ளதைப் படித்தலே சாலும்.

## தமிழ்—திராவிட மொழிக் குடும்பத்தில் மூத்தது :

ஒரு சமற்கிருதச் சொல்கூட அன்று கலவாத உலக முதல் தாய்மொழியான தமிழைப்பற்றி, கேரள மாநிலத்திலிருந்து வெளிவரும் 'மனோரமா' ஆண்டுப் பொத்தகத்தில் "திராவிட மொழிகளில் தமிழ் பழமையானதும், தூய்மையானதுமாகும்; கிறித்து பிறப்பதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே இயற்றப்பட்ட இலக்கியங்கள் தன்னுற்றலில் நிற்கக் கூடியவையாக அமைந்திருக்கின்றன. அம் மொழியில் காணக்கூடிய புதியதும், பழையதுமான வரைமுறைகள், சமற்கிருதத்திலும், ஏனைய ஆரிய மொழிகளிலும் இல்லை" என்று குறிக்கப்பெற்றுள்ளது.

தேனின் இனிமை படைத்தது என்று கருதப்பெறும் 'தெலுங்கு' மொழியைக் "கீழை நாடுகளின் இத்தாலிய மொழி" என அழைப்பர். மற்றொரு பழமையான மொழியான கன்னடத்தில் 13-ஆம் நூற்றுண்டு வரையிலான பழங்கன்னடம் (பள கன்னட அல்லது அள கன்னட) என்றும், 16-ஆம் நூற்றுண்டு வரையிலான இடைக்கன்னடம் (நடுக்கன்னட) என்றும், புதுக் கன்னடம் (ஒச கன்னட) என்றும் காணலாம்.

## சமற்கிருதம்—ஒரு கோடரி :

தமிழ் மொழி பிளவுண்டு கலப்புத்தன்மை மொழியாக கடந்த நூற்றுண்டு வரை ஆக்கப்பட்டிருத்தலாலும், சேர, சோழ, பாண்டிய நாடாகத் திகழ்ந்த தமிழகத்திலிருந்து சேரநாடு (சேரளம்) பிரிந்து போயிருப்பதிலிருந்தும், சமற்கிருதம் திராவிட மொழிகளுக்கு ஆற்றியுள்ள நற்றொண்டு வெள்ளிடைமலையாகிறது. மொழிகளைப் பிளக்கும் பணியில் சமற்கிருதம் முதலிடம் பெறும். பேராசிரியர் திரு. சாய்சு "அமெரிக்காவையும், இங்கிலாந்தையும் இணைக்கும் இலக்கியங்களையும் உட்தொடர்பையும் அழித்துவிட்டால், பிரெஞ்சு மொழியையும், இத்தாலிய மொழியையும் போல இங்கிலாந்து ஆங்கிலமும், அமெரிக்க ஆங்கிலமும் வெவ்வேறு மொழிகளாக மாறும்" என்று கூறுவது கவனிக்கத் தக்கதாம். ஆரியத்தின் பணி இம்முறையில்தான் அமைந்தது.

'மனோரமா' ஆண்டுப் பொத்தகம், "திராவிட மொழிக் குடும்பத்தில் மிகச் சிறியதும், இளையதுமான மலையாளம் பத்தாம் நூற்றுண்டில்தான் குறிப்பிடத்தக்க மொழியானது. அதுவரை தமிழின் கிளை மொழியாகத் திகழ்ந்தது. மலையாள இலக்கியங்களைப் பார்க்கும் போது, 13-ஆம் நூற்றுண்டிற்குமுன் போவதில்லை. ஆனால் 15-ஆம் நூற்றுண்டிற்குள் தனித்து நிற்கக்கூடிய இலக்கிய மொழியாக வளர்ச்சி பெற்றுவிட்டது. பழந் தமிழினின்றும் தொடர்பை அறுத்துக்கொண்ட மலையாளம், சமற்கிருதத்திலிருந்து ஏராளமான

சொற்களைக் கடன் கொண்டு விட்டமையால், வழக்கிலிருக்கும் திராவிட மொழிகளில் சமற்கிருதச் சொற்களைப் பெருவாரியாக தன்னகத்தே கொண்ட மொழியாகத் திகழ்கிறது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சேர நாட்டுப் பண்பாட்டைக் குலைக்கும் சமற்கிருதத்தின் பணி ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன்னரே நிறைவுற்றது. அதன் பயனாக இற்றை மலையாளிகள் தங்கள் முன்னோர்களுடைய இலக்கியங்களைப் படித்து இன்புறும் வாய்ப்பினை இழந்து விட்டிருக்கின்றனர். இவ்வாறாகத் தமிழர்களுக்கும் இடையே, அகத்தொடர்பு இல்லாது ஒழிந்தது.

## தமிழ் – குமரிக்கண்ட மொழி :

மொழி ஞாயிறு திரு. தேவநேயப் பாவாணர், தமது ஆராய்ச்சிச் செறிவுமிக்க உலகின் முதல் செம்மொழி (The primary classical language of the world) என்னும் ஆங்கில நூலில் இற்றை நிலையைத் தெளிவாக விரித்துள்ளார். "இவ்வுலகில், தமிழைப்போன்று வேறெந்த மொழியும் இயற்கையாலும், குறுமனம் படைத்த வெளி மற்றும் உட்பகைவர்களாலும் குலைக்கப்படவில்லை. முற்றும் ஆய்ந்துணரா வெளிநாட்டாவரும், உள்ளிருக்கும் போலிகளும், தமிழுக்கு முறைகேடுகளை இழைத்துள்ளனர். வளம்பெற்று ஓங்கிய இலெமூரிய (குமரிக்கண்ட) மொழி தமிழ் என்பதை, சமற்கிருதப் பற்றாளர்களுடைய திட்டமிடப்பட்ட ஒருமித்த முயற்சிகளால் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் நசுக்கப்பட்டு வருகிறதென்பதையும், மேலைநாட்டவர் இன்னும் உணர்ந்தாரில்லை" என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் அந்நூலில், தமிழ் இற்றைக்கு 50,000 ஆண்டுகட்கு முன்னரே எவ்வாறு குமரிக் கண்டத்தில் தோன்றி, முழுமையான மொழியாக வளர்ந்தது என்பதை நன்முறையில் விளக்கியுள்ளார்.

## சமற்கிருதம் தமிழிலிருந்து உருவாக்கிக்கொண்ட சொற்கள் :

தமிழிலிருந்தும் ஏனைய திராவிட மொழிகளிலிருந்தும் வரையறையின்றிச் சொற்களைக் 'கடன்' கொண்டதுமல்லாமல் தமிழிலிருந்து அடிப்படை ஒலி அமைப்புகளையும சமற்கிருதம் 'கடன்' கொண்டுள்ளதை விளங்கிக் கொள்ளுவது எளிது. இந்திய மொழிகளிலேயே தமிழில் மட்டுமே க, ச, ட, த, ப போன்றவைகட்கு ஓர் எழுத்தே உண்டு. சமசுக்கிருதத்திலும், அதனுடன் தொடர்பு கொண்டு சிதைந்துவிட்ட திராவிட மொழிகளிலும். ஒவ்வோர் எழுத்துக்கும் நான்கு எழுத்துகளும் ஒலிப்புகளும் உள. (க-Ka, Kha, Ga, Gha ; ச Cha, Chha, Ja, Jha ; ட-Ta, Da, Dha, Dda; த-tha, thha, dha, dhha) ஒன்றிலிருந்து தான் நான்கு வருமே

யல்லாது, நான்கிலிருந்து ஒன்று வராது என்னும் உண்மையை உணர்ந்து கொண்டால், தமிழே இந்திய மொழிகட்குத் தாய் என்பதையும், அதை மாற்றியுரைப்பது உண்மைக்கு நேர்மாறானது என்பதையும் உணரமுடியும்.

திரு. சிரீதரமூர்த்தி என்பார், வெங்கலூரிலிருந்து வெளிவரும் 'மைசிண்டியா' என்னும் ஆங்கிலக்கிழமை பிதழில் (13-பிப்ர' 72) 'இந்தியும் ஒற்றுமை'யும் என்ற தலைப்பில் எழுதியுள்ளதாவது. "இந்திய மொழிகளில் தமிழ் மட்டுமே வெளிநாடுகளில் பரவியுள்ளமைபால் அதனை உலக மொழிகளில் சேர்த்தும்; நூற்றுக்கு நூறு தனித்தன்மை வாய்ந்த தூய்மையானதென்றும், தமிழன் உரிமை கொண்டாடுகிறான். கலப்பில்லாத மொழி நாட்டு மொழியாக இருக்க வேண்டுமென விரும்புவோமேயானால், நடுவாசியாவினின்று வந்தேறிகளாக வந்த ஆரியர்களது மொழியான சமற்கிருதத்தின் வல்லாண்மையினால் தாக்கப்படாத ஒரே மொழியான தமிழே நாட்டு மொழியாக விருப்பதற்கு முழுத் தகுதி படைத்ததாகும்."

## சமற்கிருதம் தமிழிலிருந்து பெற்ற சொற்களில் சில:

தமிழிலிருந்து சமற்கிருதத்திற்குச் சென்ற சில சொற்களை ஈண்டு நோக்குவோம். முதலில் தமிழ்; அடுத்துள்ளது சமற்கிருதம். அதிகாரம்—அதிகார; அனல்—அனல்; மேழம்—மேஷம்; அம்பு—அம்பு; அம்மை—அம்பா; அமைச்சன்—அமாத்ய; அரங்கம்—ரங்க; அரசன்—ராஜன்; இலக்கணம்—லக்ஷன; உருவம்—ரூப; ஊசி—சூசி; ஒட்டகம்—உஷ்டரக; ஓடம்—ஹோடம்; கட்டில்...கட்டிவ; கண்டனம் — கண்டன; கணிதம் — கணித; கதம்பம் — கதம்பம். கலை—கலா; கன்னி—கன்யா; காக்கை—காக்க; குமாரன்—குமார; இன்னும் மிகப் பல சமசுக்கிருதத்தில் வேர்ச்சொல் இல்லாததும், தமிழில் வேர் உள்ளதுமான சமசுகிருதச் சொற்களைக் காட்டமுடியும்,

சென்னைத் தொல்பொருட்சாலை வெளியீடான 'இந்தியாவின் உள்ளும் புறமும் வழங்கும் எழுத்துகள்' (SCRIPTS IN AND AROUND INDIA) என்னும் நூலில் இந்திய எழுத்துகளில் தொன்மையானவை தென்னகத்தில் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் (தமிழ் நாடு குகை எழுத்துகள்) அவற்றிற்குரிய மொழி தமிழ் என்றும் தெளிவாகக் காட்டப்பெற்றுள்ளது. இவ்வெழுத்துகள் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகப்பேரரசனால் கைக்கொள்ளப்பட்டதென்பதும் புதுவை மாநில அரிக்கமேடு அகழ்வாராய்ச்சியினின்றும் தெளிவாக்கப்பட்டது. தமிழ் எழுத்துகளின் அடிப்படையே அறிவுக்கு விருந்தாகிறது. வேறெந்த மொழிகளின் எழுத்துகளைப் போலன்றி, தமிழ் பதினெட்டு மெய்யெழுத்து ஒலிகளைக் கொண்டது. (மெய்-உடல்) இம்மெய்க்கு உயிராகப் பன்னிரண்டு உயிர் எழுத்துகள் உள.

## தமிழில் கலப்பும்—கலப்பு நீக்கமும் :

சமற்கிருதவாளர்களால் தமிழ் வேண்டுமென்றே கலவை மொழியாக்கப்பட்டது (எடுத்துக்காட்டு: தினமணி நாளிதழ், மஞ்சரி திங்களிதழ் நடைகள்) அன்றைய திராவிட மொழியியல் பேரறிஞர் பர். கால்டுவெல், "ஆங்கிலத்தில் உள்ள இலத்தீனச் சொற்களை, தெளிவு கெடாத முறையில் நீக்கமுடியாது. ஆனால் தமிழில் உள்ள சமற்கிருதச் சொற்களை முழுதும் நீக்கித் தூய்மையானதாக ஆக்க முடியும்" என்று கூறியுள்ளார். கி. பி. 1916-இல் தனித் தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் அவர்களால் தமிழ் மறுமலர்ச்சி தொடங்கி வைக்கப்பட்டபோதுதான் தமிழர்கள் கால்டுவெல்லின் உண்மைக் கூற்றினை உணர முடிந்தது.

அடிகளார் தோற்றுவித்த தனித்தமிழ் இயக்கம் மொழிநூல் மூதறிஞர் திருமிகு. தேவநேயப் பாவாணர் அவர்களால் உலகத் தமிழ்க் கழகமாக உருவாக்கப் பெற்றுள்ளது. இக்கால் பற்பல தனித் தமிழ்த் தாளிகைகள் வெளிவருகின்றன. எனினும் இவற்றிற்கெல்லாம் முன்னோடியாக விளங்குவது 'தென்மொழி' (மாதிகை)யேயாகும்.

தமிழிலிருந்து ஐந்தில் இரண்டு பங்கு கடன் பெற்று, அதனால் வளர்ந்த மொழியே சமற்கிருதம் என்பதும், சமற்கிருதத்திலிருந்து வந்த அல்லது அதனால் வளர்ந்த மொழி தமிழன்று என்பதும் இதன் வழி அறியலாம்.

தமிழ்நாட்டு ஆளுநர் திரு கே. கே. சா, அவர்களைப் போன்று திரு. இராசகோபாலாச்சாரியும் தமிழின் தொன்மையையும், முன்மையையும் ஒத்துக்கொண்டுள்ளார்கள். "தமிழ் பாரத நாட்டின் பழமையான மொழி. குசராத்தி, மராத்தி, இந்தி, வங்காளி, சிங்களம் ஆகிய மொழிகளைப் போல், சமற்கிருதத்திலிருந்து தோன்றியதன்று தமிழ்மொழி. ஆந்திரநாட்டின் தெலுங்கு கருநாடகத்தின் கன்னடம், கேரளத்தின் மலையாளம் ஆகியவற்றுடன் ஒன்றிய சமற்கிருத சார்பில்லாத தனித்த மொழி தமிழ்மொழி என்று முன்னாள் முதல்வர் திரு. இராசகோபாலாச்சாரியின் தெளிவுரையிலிருந்தேனும், இன்றைய சமற்கிருத அன்பர்கள் தெளிவு பெறுதலோடு மட்டுமின்றி, இனியேனும் தூய தமிழுக்குத் தடையாக இல்லாது இருத்தல் வேண்டும். O

---

# தமிழன்பர் மறைவு.

அருந் தமிழ்த் தொண்டரும், திருச்சி நகர உ. த. க. பொறுப்பாளருமான, திருவாளர். வெள்ளி மலையார் அவர்கள் 18-6-75 அன்று இயற்கை யெய்தியமை யறிந்து, பெரிதும் வருந்துகின்றோம். அவர் தம் பிரிவால் வருந்தும் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

# வாழ்வே இலை வீழ்வே என
# வருவாய் தமிழ் மகனே!

துரை-மாணிக்கம்.

தமிழ்த் தாய்பெறுந் துயரைவிடத்
தாயின் துயர் பெரிதோ—நம்
தாயின் துயர் பெரிதோ—நிலை
பெரிதோ—அவள்
அமிழ்தாம் தமிழ் மொழியைவிட
அன்னை உரை இனிதோ ?—நம்
அன்னை உரை இனிதோ ?—பொருள்
இனிதோ ? (தமிழ்த்)

உயர்வாம் தமிழ் இனத்தைவிட
உற்ருர் தொகை பெரிதோ—நம்
உற்ருர் தொகை பெரிதோ—நலம்
பெரிதோ ?—அவர்
பெயர் மேவிய நாட்டைவிடப்
பெற்ருேர் நிலம் பெரிதோ ?—நம்
பெற்ருேர் நிலம் பெரிதோ ?—மிகப்
பெரிதோ ? (தமிழ்த்)

மலையாத் தமிழ்ப் போரைவிட
மனையாள் உற வினிதோ—நம்
மனையாள் உற வினிதோ—இதழ்
இனிதோ—அதன்
குலையாப் பெரும் புகழைவிடக்
குழந்தை நலம் பெரிதோ—நம்
குழந்தை நலம் பெரிதோ ?—நகை
பெரிதோ ? (தமிழ்த்)

துயர் தூவிய அடிமைத்தனம்
தொலையாப் பெரும் பகைமை—என்றுந்
தொலையாப் பெரும் பகைமை—நெடும்
பகைமை—தமை
அயர்வே தவிர்த் தழிக்காவிடில்
அடடா, தொலைந் தனையே!—அட
அடடா, தொலைந் தனையே—அழிந்
தனையே ! (தமிழ்த்)

வாழ்வே இலை வீழ்வே என
வருவாய் தமிழ் மகனே !—உடன்
வருவாய் தமிழ் மகனே !—தலை
மகனே !—வரும்
தாழ்வே தவிர் இனப்போர்புரி !
தமிழே பெறும் நலமே—செந்
தமிழே பெறும் நலமே—பெரு
நலமே ! (தமிழ்த்)




## ம : 207 : இந்தி எப்பொழுது போனது, இப்பொழுது வருவதற்கு?

ஐயா, முன்மாதச் சிறப்பு மடலில் (0 : 448) சென்னை சண்முக முருகானந்தம், க. இ., அவர்கள் எழுதியிருக்கும் மடலைப் படித்தேன். ஏதோ இந்தி போவதுபோல் போக்குக் காட்டி, இப்பொழுது வருவதாக எழுதி இருக்கிறார். இந்தி எப்பொழுது போனது, இப்பொழுது புதியதாக வருவதற்கு? 1965-ஆம் ஆண்டில் இந்தி மட்டுந்தான் ஆட்சி மொழி என்ற சட்டத்தை மாற்றினார்களா? அல்லது இந்தியைத் திணிக்கும் முயற்சியைத்தான் நிறுத்தினார்களா என்றால், இதுவரையில் இல்லை என்றுதான் தெரிகிறது.

1965-இல் நம் தமிழகத்தில் நடந்த கடும் மொழிப் போராட்டத்தினால், ஏதோ கண் துடைப்புச் செய்வதுபோல், நேருவின் உறுதி மொழியைச் சட்டமாகக் கொண்டு வருகிறோம் என்றும், மற்ற மாநிலங்கள் இந்தியை மட்டும் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளும் வரையில் ஆங்கிலமும், இந்தியுடன் துணை ஆட்சிமொழியாக இருந்து வரும் என்றும் செய்துவிட்டார்கள். அவர்கள் அப்படிச் செய்ததும் நம் தமிழகத்தின் குரலுக்கு மதிப்புக்கொடுத்து அன்று. இந்தி மொழியின் தகுதியற்ற தன்மையால்தான்! இந்தி மொழிக்கு மட்டும் தமிழுக்கிருக்கும் தகுதி இருந்திருந்தால் நிலைமையே வேறுவகையாக இருந்திருக்கும். ஏதோ, தி.மு.க 1967-இல் ஆட்சிக்கு வந்ததினால், தமிழகத்தில் கல்வித் துறை அளவில் இந்தியை நீக்கி ஆங்கிலம், தமிழ் என்ற இரு மொழிக் கொள்கையைக் கொண்டு வந்தார்கள். இதையே விரும்பாமல் நம் வீடண, எட்டப்பத் தமிழர் சிலர் இந்தியை நீக்கியதனால் தமிழர்களின் எதிர்கால வாழ்வே பாழ்பட்டு விடும் என்று பேசியும், எழுதியும் வருகிறார்கள். நடுவண் அரசோ 1965-இல் இருந்தே எப்படியும் இந்தியை மட்டும் ஆட்சிமொழியாகக் கொண்டு வருவதற்கு என்னென்ன வழிகள் இருக்கின்றனவோ அவற்றை எல்லாம் செய்து, பல கோடி பணத்தையும் செலவு செய்து வருகிறது. நம் தமிழகத்திலோ மொழி, இனப்பற்று இல்லாத அடிமை எண்ணம்; எப்படியும் தாங்கள் மட்டும் நலமுடன் வாழ்ந்தால் போதும் என்ற கொள்கை உடைய தன்னலத் தமிழர்கள் பலர் அந்த ஆரியக் கும்பலுக்கு உறுதுணையாக இருந்து வருகிறார்கள். இந்தியை எப்படியும் ஆட்சிமொழியாகக் கொண்டுவந்து விடவேண்டும் என்று இப்பொழுது அவர்கள் கொண்டுவந்திருக்கும் சில சான்றுகளை உங்களுக்கு எழுதுகிறேன். ஆங்கிலம், தமிழ் தட்டெழுத்துத் தேர்வில் தேறி இருந்தால்தான் கீழ்நிலை எழுத்தர்

களாக (L. D. C.) அரசு அலுவலத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அதிகப்படி சம்பள உயர்வு (increment) ஆண்டுக்கு ஆண்டு கிடைக்கும் என்று இதுவரையில் புதுவையில் இருந்துவந்தது. இப்போது புதியதாக அதில் இந்தியில் தட்டெழுத்துத் தேறி இருந்தாலும் அதிகப்படி சம்பள உயர்வு (increment) கொடுக்கலாம் என்று உத்தரவு வந்திருக்கிறது! புதுவையில் வேலை செய்யும் அரசு ஊழியர்களுக்கோ இந்தி எந்த வகையிலும் தேவைப்படுவது இல்லை.

மேலும் இந்தியில் பிரபாத் (Probohh) என்ற தேர்வில் தேறினால் அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காக அடுத்த ஆண்டிற்கு வர வேண்டிய அதிகப்படி சம்பள உயர்வை முன்னாலேயே, அவர்கள் தேர்வு தேறிய கிழமையிலிருந்தே கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டு இருக்கிறார்கள். அரசு ஊழியர்களுக்கு இலவயமாகவும் இந்தியில் பயிற்சி அளித்து வருகிறார்கள். இந்தக் கொடுமையான செயல்களுக்கெல்லாம் என்று விடியும் காலம் வரப்போகிறது என்று தெரியவில்லை. இன்னும் விழிப்புணர்ச்சி அடையாத தமிழர்கள், என்றைக்குத் தங்கள் பழம் பெருமையையும், இப்போது உள்ள அடிமைத் தனத்தையும் உணர்ந்து கொள்ளுகிறார்களோ அன்றைக்குத்தான் நம் தமிழ் இனத்திற்கு விடிவுக்காலம் வரும் போல் தெரிகிறது! வணக்கம். —இரா. கண்ணன், புதுவை.

## ம 203 : விரைந்து வளரும் ஆங்கிலப் பள்ளிகள்!

பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்கட்கு வணக்கம். நான் இளமை முதலே நல்ல தமிழ் பேசுவதில் விருப்பம் உள்ளவன். கடந்த 6 திங்கள்களாகத் தென்மொழி படித்து வருகின்றேன். மிக்க மகிழ்ச்சி. தங்கள் ஆசிரியவுரைகள் மிகவும் செறிவு வாய்ந்தவை. தென்மொழியில் சில உடனடி மாற்றங்கள் செய்ய வேண்டுவது தேவை என நான் எண்ணுகின்றேன். சிறுகதைகள் வரவேண்டும். தென்மொழி படிக்கும் நாங்கள் பல தமிழ்ச் சொற்களை அறியாதவர்களாக இருக்கின்றோம். நம்முடைய தனித்தமிழ் இயக்கத்தைப்பற்றி மற்றவர்களிடம் பேசும்போது, அவர்கள் கேட்கும் அன்றாட நடைமுறைச் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் எங்களுக்குத் தெரிவதில்லை. மேலும் தென்மொழியன்பர்கள் கூட்டாக இருந்தால் பலரிடம்கேட்டுத் தெளிவு செய்துகொள்ளலாம். அதற்கும் வாய்ப்பு இல்லை. மேலும் தென்மொழியில் தனித்தமிழ் தழுவிய கதைகள் வரின் அவற்றை மற்ற நண்பர்களிடம் கொடுத்துப் படிக்கச் சொல்ல ஏந்தாக விருக்கும். கதைகளின் மூலம் தனித்தமிழை மக்கள் மனத்தில் புகுத்த முடியும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. குமுதம், விகடன், கதிர் போன்ற இதழ்கள் இப்படித்தானே ஆங்கிலத்தைக் கதைகளினூடே பரவவிட்டுக் கொண்டு இருக்கின்றன. நாம் தனித்தமிழ் தழுவிய கதைகளை எழுதியும், படித்தும் வந்தால்தான் நமக்கும் பிறருக்கும் தனித்தமிழ் பேசிப் பழக உதவியாக இருக்கும்.

மேலும் நம் நாட்டில் பல ஆங்கிலப் பயிற்சிப் பள்ளிகள் மிக வேகமாகப் பரவி வருகின்றன. ஆங்குத் தமிழை சொல்லிக்கொடுக்கப்படுவதில்லை. அந்தப் பள்ளிகளில் படிப்பவர்கள் நம்முடைய தமிழ்க் குழந்தைகள்தாம். அவர்கட்குத் தமிழ் தெரியாமல் போய் விடுகின்றது. எனவே தமிழ் நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகள் சிலவற்றில் தமிழ் பயிற்றுவிக்கப் படுவதில்லை என்பதை அறியும்போது மிகவும் வருத்தமாக இருக்கின்றது. இதற்கு நம்முடைய அரசுதான் ஏதுவான வழிகள் செய்யவேண்டும். நம்முடைய இளைஞர்கள் பெரும்பாலோர் தமிழிலேயே கையெழுத்துப் போடுவதில்லை. இன்று படித்த இளைஞர்கள் பலர் நம்முடைய பண்பாடு, நாகரிகம் இவற்றை மறந்து வருகின்றார்கள். தங்கள் இதழில் இவற்றை விளக்கும்பொருட்டுச் சில குறிப்பிட்ட செய்திகளைச் சொல்லவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

— இரா. சின்னக்கண்ணு, சிங்காநல்லூர்.

## ம : 209 : தி. க.-வும், தி. மு. க.-வும்!

பேரன்பு கெழுமிய தென்மொழி ஆசிரியரும், பாவலரேறுமான பெருஞ்சித்திரனாருக்கு என் பணிவு வணக்கம். தனித்தமிழ்க் கொள்கையால் தமிழ்ப்பற்றும், தமிழின விடுதலை வேட்கையும், இலக்கிய இலக்கண அறிவும் ஏற்பட முடியும் என்பது ஆய்ந்து தெளிந்துணர்ந்த உண்மை. இந்த உண்மை நெறியில் நடைபோடும் தென்மொழி தரும் ஒளியில் தமிழகத்தைக் காணும்போது, சில கருத்தோவியங்களை மறக்கவோ மறைக்கவோ செய்யாமல் புறமுகமாகப் பேசித் திறனாய்வு செய்து, அறுவை மருத்துவம் செய்தால்தான் நாடும் மொழியும் உருப்படும்.

போலித் தமிழ்ப் பற்றுள்ள தி. மு. க.-வும், தி. க.-வும் முதலில் திருந்தவேண்டும். குமுகச் சீர்திருத்தம் செய்வதாகப் பறையடித்துக் கொள்ளும் தி. க. முதலில் மொழியில் தூய தனித்தமிழ் எழுத வேண்டும் என்ற கொள்கையை ஏற்றுத் திருந்தவேண்டும். ‘விடுதலை’ நாளேட்டில் தலையில் ‘தமிழ்நாடு தமிழருக்கே?’ என்று போட்டுவிட்டால் மட்டும் போதுமா? தமிழ்நாடு தமிழருக்கு உரிமையாக மொழி உரிமைதானே அடிப்படை! இது கூடவா ‘விடுதலை’ வீரமணிகளுக்கு விளங்குவதில்லை? பார்ப்பான் எத்துணை அளவு பாதுகாப்பாக வடமொழிச் சொற்களை விடாமல் கலப்பு மொழி எழுதி வருகிறான்? பார்ப்பனனைக் குறைகூறும் தி. க. வீரர்களுக்கு இந்த மொழிக்கொள்கை புரியவில்லையா? அல்லது புரிந்திருந்தும் புறக்கணிக்கும் போக்கா? மொழித்துறையில் ‘விடுதலை’ ஆசிரியர் தனித்தமிழ் எழுதவேண்டும். தமிழருக்குள்ள தமிழுணர்ச்சியே விடுதலை உணர்ச்சிக்கு வித்தென்பதை உணர்ந்து திருந்தவேண்டும் என்று

விரும்புகிறோம். இதனால் தமிழகத்துப் பொதுநலம் கூடும். 'விடுதலை' தமிழின நலனுக்குப் பாடுபடுவது உண்மையானால் உடனடியாகப் பார்ப்பான் மொழியாகிய வடமொழிச் சொற்களை முதலில் ஒழிக்க வேண்டும். பார்ப்பான் வேதமொழிச் சொற்கள் வடமொழியில் உள்ளன. வடமொழிச் சொற்களை நீக்கினால் பார்ப்பான் மொழி ஆட்சி நீக்கியதாகும். இதை 'விடுதலைக்காரர்கள்' கண்டும் காணாமல்போகும் போக்கைக் கைவிடவேண்டும்.

தினமணியாருக்கோ, கல்கியாருக்கோ, கோகுலத்துக்கோ, குமுதத்துக்கோ இத்துணை அளவு நாம் அறிவுரை கூற விரும்பவில்லை. இவர்கள் தமிழினப் பகைவர்கள். தமிழினத் தொண்டர்களான தி.க, வினரும், தி. மு. க.-வினரும் தனித்தமிழ் வழி பேசுவதும், எழுதுவதும் செய்யவில்லை எனில் வேறு கட்சிக்காரர்களைச் சொல்லிப் பயனில்லை. முதலில் தமிழர்கட்காகப் பாடுபடும் விடுதலை, முரசொலி, உண்மை, உழைப்பாளி போன்ற ஏடுகள் தனித்தமிழில் எழுதாமல் தயங்குவது, தளர்ச்சி அடைவது, தாழ்வுணர்ச்சியுடன் நடப்பது, மக்களுக்குப் புரியாத நடை என்பதையெல்லாம் விடுத்துத் தனித்தமிழில் எழுதிப் புரட்சி செய்யவேண்டும்.

விடுதலை, முரசொலி விளம்பரங்களையும், அரசு விளம்பரங்களையும் தனித்தமிழில் எழுதவேண்டும். மதராஸ் என்பதை தமிழ்நாடு ஆக்கியதற்காகப் பெருமைப்படும் தி.மு.க. வினர் தங்கள் பெயர்களை ஏன் மாற்ற மறுக்கிறார்கள்? தி.மு.க.-வினரும், தி.க.-வினரும் போலியாகத் தமிழை வளர்ப்பதாகப் பேசுவதையும், எழுதுவதையும் விடுத்து, விளம்பரத்தை விட்டொழித்து விட்டு, உண்மையில் தமிழ் மொழிக்கும், தமிழர்களின் வறுமை, வேலையின்மை ஒழிப்புக்கும் திட்டம் போடுவதுதான் சிறப்பு நல்கும்.

தி.க., தி.மு.க.-வைத் திருத்துவதற்குரிய தகுதியும், உரமும் உள்ள ஒரே இதழ் 'தென்மொழி'யே ஆகும். தென்மொழி தனித்தமிழ் ஒளிவிளக்கு. எந்த அமைச்சர் தவறு செய்தாலும் சுட்டிக்காட்டும் துப்பு கொண்டது-துணிவுடையது தென்மொழி. தென்மொழி அஞ்சாமல் தமிழ்மொழியின் தூய்மைக்காக, தமிழக விடுதலைக்காக உழைக்கத் தன்னலம் மறுத்து, விடா முயற்சியுடன் பாடுபடுகிறது. கலைஞரையும், தி. க. தலைவர்களையும் ஏற்றிப் போற்றிப் புகழ்பாடும் தந்நலக்காரர்கள் வேண்டுமானால், தி.மு.க., தி.க. செய்யும் புறக்கணிப்பு வேலையைத் தனித்தமிழ் பேசுவோரைப் பகடி செய்வதைக்கண்டு மகிழலாம். நாம் உண்மையாகத் தமிழுக்குத் தொண்டு செய்வதால்தான் தி. மு. க., தி. க.-வின் மொழிக்கொள்கையை-மொழிக் கொள்கையில் உள்ள ஓட்டையைச் சரியாகப்பார்க்க முடிகிறது. மேலும், தென்மொழிக்குச் சட்டமன்ற உறுப்பினர் பதவியோ, பாராளுமன்ற உறுப்பினர் பதவியோ, நகராட்சி உறுப்பினர் பதவியோ, கட்சியில் செயலர், மாவட்டச் செயலர் பதவியோ

[தென்மொழி—சுவடி 11, ஓலை 10,
11-இன் தொடர்ச்சி.] (நாடகம்)

# வயிர மூக்குத்தி

— இறைக்குருவன்.

## காட்சி 3.

இடம் : திருவரங்கத்தின் வெளிப்புறத் தெருவி லிருக்கும் ஒரு வீட்டு முன்றில்.

நேரம் : காலை.

உறுப்பினர் : அரசப்பன், பொன்னி.

பொன்னி : (தனி மொழி)
ஆன்பால் கொடுக்கக் கோயிற்குச் சென்றார்
ஏனின்னும் வந்திலர்? எங்குநிற் கின்றார்?

அரசப்பன்: (வந்து கொண்டே)
அடியே உனக்குச் செய்தி தெரியுமா?

பொன்னி: விடியுமுன் ஊர்சுற்றி ஞால்அடுப்(பு) எரியுமா?

அரசப்பன்: திருக்கோயி னுள்ளே திருட்டுப்போய் விட்டது!
தெருக்களில் பேச்(சு)இதே! வேலையுங் கெட்டது!

பொன்னி: பெரிய கோயிலில் களவுபோய் விட்டதா?
தெரியச் சொல்லுக! பெருவிலைப் பட்டதா?

அரசப்பன்: அரங்க நாயகி வயிர மூக்குத்தி!
தரஞ்சால் அதன்திறம் எங்குமே சீர்த்தி!

பொன்னி: ஒன்பதாந் திருநாள் திருவுலாப் போக்கில்
மின்போல் ஒளிர்ந்ததே அம்மையின் மூக்கில்!
கள்வன் எங்கே? என்ன ஆனான்?

அரசப்பன்: தெள்ளிதாய் என்னிடஞ் சொல்லியா போனான்?

---

—[28-ஆம் பக்கத் தொடர்ச்சி]

தேவையில்லை. பதவியைத் தேடி ஓடும் நாய் அன்று தென்மொழி. அது ஓர் அரிமா. அதன் நோக்கம் தமிழ்; தனித்தமிழ் முரசு கொட்டுவது; தமிழ்நாட்டின் உரிமைக்கு, உண்மையான மான மறவர்களை—உயிர் இழக்கத் துணியும் ஈக நெஞ்சினர்களை உருவாக்குவது? எனவே, எவர் தவறு செய்தாலும் தவறு இஃது எனக்காட்டித் திருத்துவது தென்மொழியின் பணி ஆகும்.

பொதுவுடைமைக் கட்சிகளையும், அ.தி.மு.க.-வையும்விட நாம் அதிக அளவு உரிமையுடன் குறைகளைக்காட்டி, தி.மு.க., தி.க.வைத் திருத்த விரும்புவதன் காரணியம் தமிழக நலமே. புரட்சிப் பாவலரே நன்றி. —செங்கண்ணன், ஆரணி, வ.ஆ. மாவட்டம்.

பொன்னி: எடுத்ததற் கெல்லாம் ஏட்டிக்குப் போட்டி
தொடுத்துப் பேசு கின்றதென் நீட்டி?
கருவறைக் குள்ளுமா கள்வன் செல்வது?
பெருகவுந் துணிச்சல்! உலகையென் சொல்வது?

அரசப்பன்: தேட்டுப் போனது போகட்டும் என்று,
தீட்டுப் போக்கச் சொல்வையோ? நன்று!

பொன்னி: ஆண்டவன் பொருளை அச்சமில் லாது
தீண்டிட வேண்டுமேல் யார்க்குத் தோது?

அரசப்பன்: தாயறி யாத சூலில்லை யாண்டும்!
கோயி லாளர்தாம் தருதல் வேண்டும்!

பொன்னி; நன்றும் தீதும் நம்கையில் இல்லை!

அரசப்பன்: என்றுவாய் மூடி இருக்கிருய் அல்லை!
காவலர் செவியுறின் பற்றிச் செல்லுவர்,
யாவர்க்கு முன்னர் அடித்துக் கொல்லுவர்!
சரி சரி! வா!வா! வீட்டுப் போகலாம்!

பொன்னி: பெரிதுநும் வீரம்! இதனினுஞ் சாகலாம்!

[போகின்றனர்.]

— திரை. —

## காட்சி 4.

இடம்: திருவரங்கத் திருக்கோயில் முன்மண்டபம்.
நேரம்: நண்பகல்.
உறுப்பினர்: அறங்காவலர், ஊர்ப் பெருமக்கள், கருவூலத்தார், மெய்காவற்காரர், நம்மாழ்வார், பட்டர்கள், பிராமணப்பிள்ளை (பரிசாரசன்) வேங்கடம், ஏவலர்.

அறங்காவலர். தகவுடைப் பெரியீர்! கோயிலிற் களவு
நிகழ்ந்திருக் கின்றது! பொருள்விலை யளவு
மிகவும் பெரிது; கிடைத்தில(து) உளவு!
அன்னையின் வயிர மூக்கணிப் பெருமை
தன்னை யறியார் பெரிதும் அருமை!
அத்தகை யணிகலன் எத்தகை யுற்றது,
மெத்தவுங் கொடிய(து)! அறங்காவ லற்றது!
பாங்காய் அதுதரல் உள்துறை பொறுப்பு;
ஈங்கிதற்கு யாதும் உள்ளதா மறுப்பு?

ஊர்ப் பெருமகனுர்: மெய்காவற் காரர் மறுமொழி யாது?

மெய்காவலர்: ஐயன்மீர்! வணக்கம்; அரங்க னின்மீ(து)
ஆணை! என்வாய் பொய்பே சாது!
கோணை மனங்கொடு செய்கிலேன் தீது!
எழுதலை முறையாய்ப் பணிமேற் கொண்டு
பழுதிலா(து) அரங்கற்குச் செய்கிறேம்
[தொண்டு!
செழுமையாய் இதுவரை வாழ்கிறேம் உண்டு!

| | |
|---|---|
| ஊ. பெ. 2. : | வழுவிலர்; இவர்பால் வாய்மை உண்டு ! |
| அ. கா. : | அறிவோம் ! அறிவோம் ! ஆயினும் பேரவை<br>நெறிமுறைப் படியே வினவுகின் றேமிவை !<br>[கருவூலக்காரரை நோக்கி]<br>கருவூலக் காரரே ! மறுமொழி யாது ? |
| கருவூலக்காரர்: | பெருமக்காள் வணக்கம்! முறைவழு வாது<br>திருவிழா தொடர்ந்து நடக்குமிப் போது<br>கலன்பல பட்டர்பால் கொடுக்கப் பெற்றுள;<br>நலனுறக் காப்பாய் உள்ளன மற்றுள!<br>கருவூ லத்திற் கலனையொப் படைப்பது<br>திருமேனி தீண்டுவார் பொறுப்பே; மரபிது!<br>நெய்க்கொப் பரையிலும் கையை விடுவேன்!<br>பொய்ப்புரை புகலின் குடியொடு கெடுவேன் ! |
| ஊ. பெ. 3: : | பண்டா ரத்தார் மெய்யே விண்டார் ! |
| ஊ. பெ. 4, : | ஒண்டொடி நாச்சியார் அன்றியார் கண்டார்? |
| ஊ. பெ. 1. : | சும்மா விட்டால் தொடருமிம் மாயம் ! |
| கருவூலக்காரர் : | அம்மன் கோயில் இடவகத் தாயம்<br>நம்மாழ் வாரே பொறுப்புகட் டாயம்!<br>பிராமணப் பிள்ளை இங்குவர வில்லை! |
| அறங்காவலர் : | வராத தென்னை? வருவிக்க ஒல்லை !<br>[ஏவலன் செல்கிறான்.] |
| ஊ. பெ. 2. | வேங்கடந் தானே? வெளியில்பார்த் தேனே !<br>[ஏவலனும், வேங்கடமும் வரல்.] |
| வேங்கடம் : | ஈங்குவர எண்ணி இருந்தேன் யானே ! |
| அறங்காவலர் : | [பட்டரைப் பார்த்து]<br>அருண்மேனி தீண்டும் பெருமைசால் பெரியீர் !<br>திருவணி நீரே தருவதற்(கு) உரியீர்!<br>ஒருதலை யீது ! நும்முரை யாது ? |
| நம்மாழ்வார் : | பெருமக்கள் வாழ்க ! கரவறி யாது<br>வழிபாடு செய்யும் வாழ்வுடை யேமை,<br>இழிவுற இங்ஙனம் வினவுதல் தீமை !<br>அவன்செய லென்றே யமைதி கொள்ளுக !<br>தவறான எண்ணம் யாவையுந் தள்ளுக ! |
| பட்டர் 1. : | காலம் மிகவும் கெட்டு விட்டது ;<br>ஞால முறைமை யழிந்து பட்டது ! |
| அறங்காவலர்: | பட்டரே அந்தப் பேச்சை விடுக !<br>சட்டென மூக்கணி ஒப்படைத் திடுக ! |
| பட்டர் 2. : | உயர்குலத் தவர்பால் கொள்கிறீர் ஐயம் !<br>துயர்மிகப் பெருகிக் கெடுமினி வையம் ! |
| ஊர்ப் பெரு. 3. : | [தணிந்த குரலில்]<br>பட்டர் பேச்(சு)என் நெஞ்சைத் தொட்டது ! |
| ஊர்ப் பெரு. 4. : | கெட்ட காலம் யாரை விட்டது? |

அறங்காவலர் . பட்டர்காள்! பற்பல பேசுதல் பசப்பே!
வெட்டெனப் பேச! இன் றேன்மனக் கசப்பே!
நலமுற மறுமொழி நவிலமாட் டாது,
குலநலம் பேசுதல் முறைமையா காது!

ஊர்ப் பெரு. 1.: மடைப்பளி பிராமணர் சொல்லுவ(து)யாவது?

வேங்கடம் : கடைப்பட்ட காலம்! யாரை நோவது?
வெண்ணெயும் கன்னியர் சீலையுங் கவரும்
கண்ணனின் மாயம்யார்க் குத்தெரி யவரும்?

ஊர்ப் பெரு. : நேரிய மாற்றம் நிகழ்த்திலர் இன்னும்!
வீரிய மொழியே விளம்பினார் பின்னும்!

வேங்கடம் : ஆரிய மேலோர் யாம்நிலத் தேவர்!
சீரிய வாழ்வினேம் எம்மேல் யாவர்
கூரிய வினைக்கணை தொடுப்பினும் சாவர்!
பூரியர் ஆழும் அளற்றுட் போவர்!

ஊர்ப் பெரு. 2. இவ்வாறு பேசியே நேரங் கழிக்கிறார்!

ஊர்ப் பெரு. 3. ஒவ்வாது இவருரை மன்றைப் பழிக்கிறார்!

வேங்கடம் : நவையே செய்கிறீர், மேலும் மேலும்!

ஊர்ப் பெரு. 4: இவையெலாம் பேசுதல் ஏமாற்றுப் போலும்!
அவையோர் ஏற்பது யாங்ஙனம் சாலும்?

ஊர்ப் பெரு. 1: மெய்வர வில்லை; வாய் வீச்சே மிக்கது!

அறங்காவலர் : நையப் புடைத்தலே செய்யத் தக்கது!
[ஏவலரை நோக்கி]
கொட்டாவி விட்டு நிற்பதேன் வீணில்?
பட்டரோ(டு) இவரையுங் கட்டுக் தூணில்!
[ஏவலர் இருவரையும் தூண்களில் கட்டுகின்றனர். அறங்காவலர் அவர்களைப் பிரம்பால் அடிக்கிறார்: மற்றைப் பட்டர்கள் கண்களை மூடிக்கொள்கின்றனர்.]

நம்மாழ்வார் : [அழுதுகொண்டே]
அய்யோ! அப்பா! அடித்தது போதும்!
மெய்யாய்ச் சொல்கிறேன் அறியேன் யாதும்!

வேங்கடம் ; [அழுதுகொண்டே]
அய்யோ! அப்பா! மெய்நோ கிறதே!
தெய்வமே என்றன் உயிர்போ கிறதே!
ஒன்று சொல்கிறேன் கேளுங்கள் சற்றே!
இன்று முதலெழு நாளில்யாம் உற்றே,
களவை வெளிப்படுத் திடுவோம்! அற்றை
அளவும் பொறுக்க! இல்லையேல் பிற்றை
வெட்டுக தலையை! சொல்லோம் மறுப்பு!

ஊர்ப் பெரு. 1: பட்டரே இதற்கும் ஏற்பாரா பொறுப்பு?

நம்மாழ்வார் . அட்டி யில்லையவ் வாறே யாக!

அறங்காவலர் , கட்டை யவிழ்த்து விடுவீர் போக!

(கட்டவிழ்க்கப் பெறுகின்றனர்.)

—திரை.—

—(தொடரும்)

சிறையில் அடைபட்டுக் கிடந்த எங்களது குருதியும் சதையு மாகிய உடன் பிறப்புக்களுக்கு எங்களது வணக்கத்தையும் நன்றி யினையும் கூறுங்கள். தளரா நெஞ்சுரம் கொண்ட தன்மானமிக்க தமிழ் மறவர்களுக்கு எங்கள் கண்ணீரைப் படையல் ஆக்குகின்றோம்.

தமிழ்நாடு விடுதலை இயக்கத்தை இலண்டனிலும் அமைத்து, மேற்கு நாட்டினர்க்கு நமது நிலையைத் தெளிவுபடுத்தவும், உதவி களைப் பெறவும், இந்தி(ய) அரசுக்கெதிரான கிளர்ச்சிகளை எதிர் காலத்தில் நடத்தவும், அஞ்சாநெஞ்சங் கொண்ட மறவர் படையை அமைக்கவும் நாங்கள் அணியமாய் இருக்கின்றோம்.

— தமிழ்நாடு விடுதலை இயக்கத்தினர், இலண்டன்.

**0 : 464 :** நெஞ்சுரங்கொண்ட அஞ்சாத்தமிழ! வாழிய நீவிர்! வணக்கம். கடந்த ப த்தாண்டுகளாகத் தென்மொழியைப் படித்து வருபவன் யான். எனவே அஃது ஆற்றிவரும், குமுகாயத் தொண்டும், மொழித் தொண்டும் அளவிடற்கரிய. பாவாணர் வழியில் பைந்தமிழ் நாட்டில், மொழி, இன, நாட்டு விடுதலைக்குத் தாங்கள் ஆற்றி வரும் பணி சிறப்பானது; செம்மையானது. இஃதறியா இழிதகையார் சிலர், தங்களின் தன்னலம் பேணாத் தகைவுடைச் செயலைத் தூற்றித் திரிவதும், தங்கள் கருத்துகளைத் தூக்கியெறிந்து பேசுவதுமே தம் தொழிலாகக் கொண்டுளர்; என்னே! அவர் தம் இழிசெயல். இதுகண்டு தாங்கள் தளர்ச்சியுறாமல், மொழிக்காகவும், நாட்டுக்காகவும், ஆற்றி வரும் தொண்டில் இம்மியளவுகூட குறைத்திட வேண்டாமென்று இறைஞ்சி வேண்டுகிறேன்.

—முருகு. இறைமறவன், சுந்தம்பட்டி, புதுக்கோட்டை.

**0 : 465 :** தனித்தமிழ் ஐயா! என் அன்பு வணக்கங்கள், தனித் தமிழ் பயிலத் துடிக்கும் எண்ணற்ற உள்ளங்களில் நானும் ஒருவன். தென்மொழி நான்கைப் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அன்றே நான் மிகவும் கவலுற்றேன். தமிழனாகப் பிறந்து தமிழ் மொழி, இனம் காக்க தங்கள் உயிர்களை ஈந்து 'தென்மொழி' தனித்தமிழ் இதழை இற்றை நாள் வரை கல்லாமல் இருந்துவிட் டோமே என்று நான் மட்டுமல்லன் தமிழனாகப் பிறந்த அனைவரும் வெட்கமுற வேண்டியவர்கள்! தமிழனாகப் பிறந்தெவனொருவன் "தென்மொழி"யைப் படியாமலுள்ளானோ அவன் தமிழனல்லன் என் பதே கற்றோரின் கருத்து.

நானிந்த சில உண்மைகளை உங்களுக்கு அறிவிக்கின்றேன். தமிழன், தமிழனை வாழவிடான்; ஒருவனின் முன்னேற்றம், இன் னொருவனுக்குப் பிடிக்காது! தன் மொழி, இனங் காவான், பொது வாகக் கூறின் ஒன்றித்து ஒத்து வாழ்வோம் எனும் மனப்போக்கே இல்லாதான். தனி நாடாக விருப்பதால்தான் "இசுரேல்" தம் இனத் தவர் எங்கு வாழினும் 'வருக' என அழைக்கின்றது. ஆனால் நாமோ நம் தனி நாட்டிற்கு வழிவகுக்க வழி காண இயலவில்லையே!

—நா. செல். அமச்சியப்பன், பேராக், மலேசியா.

**0 : 466 :** செஞ்சொற் பாவல! இனிய தமிழ் வணக்கம். சுவடி 12, ஓலை 7, இதழ் கண்டேன்; பெரிதினைந்தேன். ஆங்கில ராட்சியில், கல்லா மாந்தரைக் கரவாக ஏமாற்றிப் பல பொல்லாங்கு களை விளைத்துக் கிறித்தவர் ஆக்கிய (!) ஆங்கிலக் கிறித்துவச் சிறு

—(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

மதியாளரின் பிறங்கடையினர் சிலர், இக்கால், தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரையுங் கிறித்துவராக்கிக் (!) காட்டத் துணிந்தமையறிந்தேன்; உளந் துடித்தேன். காலக் கொடுமையினை என்னென்பேன்? இன்று வள்ளுவ நாயனார், நாளை வள்ளலார், மறுநாள் எல்லாருமே கிறித்தவர் ஆக்கப்படுவோமோ என்னும் அச்சம் அலைக்கழிக்கின்றது. ஆரியப் பார்ப்பனரும், அடிவருடிகளும் மொழியழிப்பு வேலையில் முனைந்து நிற்கின்றனர் ஒருபுறம்; அறிவுத் துருப்பேறிய கிறித்தவர் தம் ஆக்கத் (!) திருப்பணி மறுபுறம். ஐயகோ! தன்மானத் தமிழா! எங்கே நின் மறம்? இன்னுமா நீ மரம்? கொஞ்சமுமில்லையா நெஞ்சுரம்? தமிழ், நைந்ததெனில் நைந்துபோகுமே நம் வாழ்வு; நன்னிலை தமிழ்க்கெனில் நமக்குத்தானே! கொன்னே, உண்டு களித்திருப்பதை இன்றே விடுக; இன்னே, தன்முனைப்புடன் எழுக; தமிழ், தமிழ் என்றார்வமுடன் குரலெழுப்பித் தடைக்கற்கள் தமையிடிக்க எழுக. பழந்தமிழ் வீரத்துடன் எழுக. எதிர்வரும் எதிர்ப்புகளெல்லாங் கெடுக. நாளை நம்முடையதே; நல்ல தமிழுக்குரியதே. வெல்க. —பெரு. தமிழ்வேந்தன், உத்தண்டியூர்.

**0 : 467 :** தஞ்சையில் 'தொல்காப்பியர் கழகம்' என்ற அமைப்பினர் திங்கள் தோறும் நடத்திவரும் பல்வேறு இதழ்களைப் பற்றிய திறனாய்வுக் கூட்டத்தில், சென்ற மார்ச்சுத் திங்கள் நண்பர் அரசிறைவன் கலந்துகொண்டு, தனித்தமிழ் இதழ்களான 'தென்மொழி', தமிழ்ச்சிட்டு', 'தமிழம்'. 'வல்லமை' ஆகிய இதழ்களைக் கூட்டத்தார்க்கு அறிமுகப்படுத்தி வைத்து உரையாற்றினார். முடிவில், தலைமை தாங்கிய கரந்தைத் தமிழ்ப்புலவரும், கல்லூரிப் பேராசிரியருமான திரு. பாலசுந்தரம், 'வல்லமை' என்னும் சொல் தனித் தமிழ்ச்சொல் அன்று என்றும்; **'சிட்டு'** என்னும் சொல்லும் **'சிற்று'** என்னும் சொல்லின் சிதைந்த வழக்கே என்றும் கூறி, **'சிற்றெறும்பு'** என்னும் சொல்லை எடுத்துக் காட்டினார். மொழியார்வத்தால் இத்தகைய கேடுகள் நேரலாமா என்றார். அவர் ஒரு தமிழ்ப் பேராசிரியரானபோதும், மொழியடிமையைப் பற்றிச் சிறிதும் கவலையற்றவராக இருக்கிறார். தொடக்க நிலையிலுள்ள என் போன்ற தனித்தமிழ் அன்பர்கட்கு இதுபோன்ற ஐயங்கள் களையப் படாமலே போய்விடுகின்றன. அருள்கூர்ந்து இவ் ஐயங்களைப் போக்கிட வேண்டுகிறேன். —இறை. மகிழ்நன், தஞ்சாவூர்.

*[ஆசிரியர் குறிப்பு: 'வல்லமை' தூய தமிழ்ச் சொல்லே. 'சிட்டு' என்னும் சொல் 'சிறு' என்னும் மூலத்தைக்கொண்டு உருவான சொல். தொடக்கத்தில் 'சிற்று' என்று ஆளப்பெற்றிருக்கலாம். ஆனால் ஒரு மூலத்தினின்று உருவான ஒரு சொல். சிறப்புக் கருதித் தனிச்சொல்லாகவே வளர்ந்து நிலைப்பட்டபின், [illegible]த் முன்னிருந்த நிலையைக் கையாள்வது தவறு. ஒருப்[illegible]ல், ஒ[illegible]ருப்படுதல்—ஒன்றுதல்—ஒன்றல்—ஒட்டல் என்னும் சொல் வளர்ச்சியைக் கவனிக்க. பொருத்துதல் என்னும் பொருள்படும் [illegible]த்தல் என்னும் சொல், அதன் முழு வடிவம் பெற்று முழுப்பொருளைத் தந்து நிலைபெற்றபின், ஒற்ற வைத்தல் என்னும் முன்னிறுதி நிலைச்சொல்லை ஆளுதல் மயக்கந்தருவது மட்டுமன்று மரபுப் பிழையுமாகும்.—ஆ-ர்.]*

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.